Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 291 பிலவ வருடம், ஆடி மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை
(31.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 20, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்

நாய்க்கு ஊசி போட்டிருக்கு பயப்படாம வாங்கோ எண்டு சொன்ன காலம் போய், நமக்கு ஊசி போட்டிருக்கு பயப்படாமா வாங்கோ எண்டு சொல்லுற நிலைமை பாருங்கோ வாழ்க்கை ஒரு வட்டம் தானுங்கோ..



## ஓகஸ்ட் 2 ஆம் திகதி பணிகளுக்கு திரும்புக

### அரச பணியாளர்களுக்கு அழைப்பு

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி முதல் அனைத்து அரச ஊழியர்களையும் வழமை போன்று கடமைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறிக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மட்டுப்படுத்தப்பட்ட அளவில்....

02»

## இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்க முடியாது

### உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்திய மத்திய அரசு வாதம்

இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்க முடியாது என்று உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்திய ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

அகதிகளாக வந்த இலங்கை தமிழர்கள், தங்களுக்கு இந்தியக் குடியுரிமை வேண்டும் என்றும், நீண்ட நாட்களாக தமிழகத்தில் குடியிருப்பதால் பூர்வீகம் தமிழ்நாடு என்றும், இந்தியக் குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை கடந்த 2019 ஆம் ஆண்டு நீதிபதி சுவாமிநாதன் விசாரணை செய்து இலங்கை...

02»

# எதிர்வரும் வாரங்கள் ஆபத்தானவை!



## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

## இரு வாரத்தில் 663 மரணங்கள் பதிவு

•யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் எதிர்வரும் வாரங்கள் மிக ஆபத்தானதாக மாறலாம் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான இரு வாரத்தில் 663 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், 22 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் மாத்திரம் 365 மரணங்கள் பதிவாகியுள்ளன. இது மிக ஆபத்தான நிலைமையாகும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

02»

## 80 கிலோ எடை கொண்ட இரத்தினக்கல் கண்டுபிடிப்பு

இரத்தினபுரி, இறக்குவானை பகுதியில் 80 கிலோ எடை கொண்ட மற்றுமொரு Sapphire Cluster எனும் நீல மாணிக்கக் கல் பாறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணிக்கக் கல் பாறை தற்போது கொழும்பில் உள்ள வியாபாரி ஒருவரிடம் உள்ளதாகவும் அதனை பரிசோதனை செய்ய தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது குறித்த மாணிக்கக் கல் பாறையை தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த மாணிக்க கல்லின் பெறுமதியை மதிப்பீடு செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் சர்வதேச சந்தையில் ஏலத்திற்கு விடுவதாக அதிகாரிகள் குறித்த வர்த்தகருக்கு வாக்களித்துள்ளனர்.

## சீனாவில் பரவும் புதிய வைரஸ்

சீனாவின் நாஞ்சிங்கில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை வைரஸ் பெய்ஜிங் உள்ளிட்ட ஐந்து மாகாணங்களுக்குப் பரவியுள்ளதுடன், வூஹானில் அடையாளம் காணப்பட்ட கொரோனாவை விட இது வீரியம் கொண்ட தொற்று எனவும் சர்வதேச ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஜூலை 20ஆம் திகதி நாஞ்சிங் நகரின் விமான நிலையத்தில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதுடன், இதுவரை கிட்டத்தட்ட 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, நாஞ்சிங் விமான நிலையத்திலிருந்து அனைத்து விமானங்களும் ஓகஸ்ட் 11ஆம் திகதி வரை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02»

## மாதம் நான்காயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழக்கலாம்!

### வைத்தியர் பிரசாத் கொலம்பகே எச்சரிக்கை

•யோ.தர்மராஜ்

நாளுக்கு நாள் 50க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகள் உயிரிழக்கின்றனர். அவ்வாறாயின் ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 4 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரத்து 500 நோயாளிகள் உயிரிழப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

02»

# தோண்டப்பட்ட டயகம சிறுமியின் உடல் ஆய்வுக்காக அனுப்பிவைப்பு

### மேலதிக உடற்கூற்று பரிசோதனை அறிக்கை விரைவில்!



02»

## விரிவுரையாளர் கண்ணதாசன் வவுனியா மேல் நீதிமன்றால் விடுதலை



யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளர் முன்னாள் போராளி நல்லை கண்ணதாசன் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக இளைஞர் ஒருவரை கட்டாய ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா நீதிமன்றினால் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

03 ஆண்டுகளாக சிறைத்தண்டனை அனுபவித்த அவரை, குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 2020ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 22 ஆம் திகதி விடுதலை செய்திருந்தது.

02»

## இலஞ்ச வழக்குகளிலிருந்து சரண குணவர்தன விடுதலை



இலஞ்ச, ஊழல் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளிலிருந்தும் முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த 8 வழக்குகளிலிருந்தும் அவரை விடுதலை செய்ய கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று (30) கொழும்பு பிரதான நீதவான் புத்திக சீ.ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கை தாக்கல் செய்த சந்தர்ப்பத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மூவர் உரிய ஆவணங்களை முன்வைக்காத காரணத்தினால் குறித்த வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வது கடினமான விடயம் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் ஆஜரான அதன் உதவி பணிப்பாளர் அசித அன்டனி நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

02»

## சொல்லாடல்

தெரிந்ததும் தெரியாததும்

நாட்டில் தற்போது முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்...

ரிஷாட்டின் கைது உட்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு

மனந்திறக்கிறார் மு.கா. தலைவர் ஹக்கீம்



தமிழன் ஞாயிறு வார இதழில்...

## தமிழ் சமூகத்தின் நலன்களை பாதுகாக்கும் பொறுப்பை இலங்கை நிறைவேற்ற வேண்டும்



### இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் முரளீதரன்

தமிழ் சமூகத்தின் நலன்களை பாதுகாப்பது குறித்த தனது பொறுப்பை இலங்கை நிறைவேற்றவேண்டும் என தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி.முரளீதரன் இந்திய நாடாளுமன்றத்திற்கான எழுத்துமூல பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்லின, பல்மத சமூகம் என்ற இலங்கையின் குணாதிசயத்தைப் பேணுவதற்கான முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளித்து வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுக்குமாறும் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுமாறும் இந்தியா இலங்கையை...

02»

## தோண்டப்பட்ட டயகம....

**எம்.கிருஸ்ணா - க.கிருஷாந்தன்**

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணியாற்றிய நிலையில், தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த ஹிஷாலினியின் உடல் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தோண்டி எடுக்கப்பட்டது. விசேட வைத்திய குழுவினர் முன்னிலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, கண்டி - பேராதனை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் வீட்டில் வீட்டு பணிப்பெண்ணாக இருந்து தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த (15) ஆம் திகதி உயிரிழந்த டயகம மேற்கு பிரிவு தோட்ட சிறுமி ஜூட்குமார் ஹிஷாலினியின் உடலை தோண்டி எடுத்து மேலதிக உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பிவைக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

அதன்கமைய, நேற்றுக் காலை 9 மணிக்கு சடலத்தை தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு 12 மணியளவில் சடலம் வெளியில் எடுக்கப்பட்டது.

சிறுமி ஹிஷாலினியின் பிரேத பரிசோதனை கொழும்பில் இடம்பெற்றதாகவும், முஸ்லிம் வைத்தியர் ஒருவர் சடலத்தை பரிசோதனைக்கு உட்படுத்தி சடலம் பெற்றோர்களுக்கு கையளிக்கப்பட்டதாகவும் தனது மகளின் மரணத்தில் சந்தேகம் உள்ளதால் மீண்டும் சட்ட வைத்தியர் ஒருவர் ஊடாக உடற்கூற்று பரிசோதனை செய்ய வேண்டும் என சிறுமியின் பெற்றோர் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறையிட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி லுசாக்கா குமாரி ஜெயரத்ன முன்னிலையில் தெரிவித்தனர்.

இதனையடுத்து சிறுமியின் உடல் புதைக்கப்பட்ட டயகம மேற்கு தோட்ட புதைகுழிக்கு கடந்த நான்கு நாளாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், சிறுமியின் சடலத்தை தோண்டி பரிசோதனைக்கு அனுப்ப கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதற்கமைவாக சிறுமியின் சடலத்தை தோண்டி எடுக்க கொழும்பிலிருந்து சிரேஷ்ட சட்ட வைத்தியர் உள்ளிட்ட பொலிஸார் மற்றும் அதிகாரிகள் அடங்கிய விசேட குழு ஒன்று நுவரெலியாவுக்கு வருகை தந்திருந்தது.

இக்குழுவில் வருகை தந்திருந்த சிறுவர் உரிமை அதிகார சபை அதிகாரிகள் சிறுமியின் சடலத்தை தோண்டுவதற்கு அனுமதி கோரி நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் அனுமதி விண்ணப்பம் வழங்கியிருந்தனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட அனுமதி விண்ணப்பத்தை பரீசிலனை செய்த நீதிபதி நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி லுசாக்கா குமாரி ஜெயரத்ன, தனது நேரடிப் பார்வையில் புதைகுழி தோண்டப்பட்டு உடலத்தை மீட்க அனுமதியை வழங்கினார்.

இதற்கமைய கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள வைத்தியர்கள் உள்ளடங்கிய அதிகாரிகள் மற்றும் கண்டியிலிருந்து வருகை தந்திருந்த இரண்டு வைத்திய அதிகாரிகள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட குழுவினர், நுவரெலியா, டயகம பொலிஸார் உள்ளிட்டோர் முன்னிலையில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பித்து நண்பகல் 12 மணியளவில் புதைக்கப்பட்டிருந்த சிறுமியின் உடலைத் தோண்டி எடுத்து பலத்த பொலிஸ் பாதுகாப்போடு கண்டி - பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இதனையடுத்து, குறித்த சிறுமியின் இரண்டாவது பிரேத பரிசோதனை அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலஞ்ச...

அவ்வாறு வழக்கைத் தொடர்ந்து நடத்தி செல்வது கடினமாயின் பிரதிவாதியை விடுதலை செய்யுமாறு சரண குணவர்தன சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த நீதிபதி, இலஞ்ச ஊழல் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8 வழக்குகளில் இருந்து பிரதிவாதியான சரண குணவர்தனவை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

2006 மற்றும் 2007 க்கு இடையில் அவர் தேசிய லொத்தர் சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட மோசடி சம்பவங்களுக்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

தேசிய லொத்தர் சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் ரூ. 8.5 மில்லியன் பெறுமதியான வாகனத்தை இறக்குமதி செய்த விவகாரத்தில் அவருக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வாகனத்தை லொத்தர் சபைக்கு அவர் மீள கையளிக்கவில்லையென்றும் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விரிவுரையாளர்...

இருந்தபோதிலும் அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்குத் தொடர்பில் மீள்விசாரணை நடத்தி வழக்கினை முடிவுறுத்துமாறு வவுனியா மேல்நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்காக வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

வழக்குத் தொடுநரான சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி, குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்ய விண்ணப்பம் செய்தார். கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

வழக்குத் தொடுநர் தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், கண்ணதாசனை விடுதலை செய்ய தீர்ப்பளித்தார்.

## மாதம் நான்காயிரத்திற்கு..

நாட்டில் நாளுக்கு நாள் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அதிகரிக்கும் கொரோனா நோயாளர்களில் நூற்றுக்கு 50 வீதமானவர்களுக்கு தற்போது ஒட்சிசன் தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவர்களுக்கு டெல்ட்டா திரிபுடன் தொடர்புள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது தேசிய வைத்தியசாலையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை முழுமையாக நிரம்பியுள்ளது. இது நோயாளர்களின் எண்ணிக்கையை தாண்டிச் செல்வதற்கு அருகில் உள்ளது. மேலும், குழந்தைகள் மருத்துவமனையில் மொத்த படுக்கைகளின் எண்ணிக்கையை விட நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

நாளுக்கு நாள் 50 க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகள் உயிரிழக்கின்றனர். அவ்வாறாயின் ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 4 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரத்து 500 நோயாளிகள் உயிரிழப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது மிக ஆபத்தான நிலைமையாகும். யுத்தத்தின் போது கூட இந்த நாட்டில் இவ்வளவு மக்கள் உயிரிழக்கவில்லை. எனவே, இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

# முஸ்லிம்களுக்கு எதிராக முகநூலில் பதிவிட்டுள்ள காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும்

## அம்பாறை மாவட்ட பொது அமைப்புகளின் தலைவர்கள் வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

உலக முஸ்லிம்களின் தலைவராக உள்ள இறைத்தூதுவரும் முஸ்லிம்கள் தங்களின் உயிரைவிட மேலாக மதிக்கும் முஹம்மது நபியை தகாத வார்த்தைகளை பயன்படுத்தி முகப்புத்தகத்தில் பதிவொன்றை பகிர்ந்துள்ள காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சம்மாந்துறை பகுதியில் நேற்று (30) இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டே இவ்வேண்டுகோளை முன்வைத்தனர்.

அவர்கள் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

உலக முஸ்லிங்களின் தலைவராக உள்ள இறைத்தூதுவரும் முஸ்லிம்கள் தங்களின் உயிரைவிட மேலாக மதிக்கும் முஹம்மது நபியை தகாத வார்த்தைகளை பயன்படுத்தி முகப்புத்தகத்தில் பதிவொன்றை காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் என்பவர் பகிர்ந்துள்ளார்.

அண்மைக்காலமாக இவர் இனங்களுக்கிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை பரவலாக மேற்கொண்டுள்ளதை காண முடிகின்றது. இவ்வாறு உலக முஸ்லிம்களின் தலைவராக உள்ள இறைத்தூதரான எமது முஹம்மது நபியை தகாத வார்த்தைகளை பயன்படுத்தி பதிவொன்றை பதிவிட்டுள்ளனர். இதனால் எமது நாட்டில் சமாதான சீரழிவும், பெரும் இனக்கலவரம் உருவாகவும் வாய்ப்பிருக்கிறது. எனவே, இவரைக் கைதுசெய்து நாட்டின் இறையாண்மையை பாதுகாக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாக செறிந்து வாழும் இந்நாட்டில் இனக்கலவரம் ஒன்றை உருவாக்க எத்தனித்திருக்கும் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் என்பவரை நாட்டை சீரழிக்க முனைந்த குற்றத்திற்காக கைதுசெய்து சட்டத்தின் படி உயர்ந்த தண்டனையை பெற்றுக்கொடுக்க பொலிஸாரும், அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

மேலும், நேற்று மாலை குறித்த முகநூல் பதிவு தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என். ஹுதா, சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவை தலைவர் எம்.எச்.எம். இப்ராஹிம் , கல்முனை நல்லிணக்க அமைப்பின் தலைவர் ஏ.சி.எம்.கலீலுர் ரஹ்மான், உள்ளிட்ட அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் தலைவர்கள் பதிவுசெய்திருந்தனர்.

# பின்தங்கிய பகுதி பிரிவெனாக்களின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

நாட்டில் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பிரிவெனாக்களில் கல்வி கற்கும் பிக்குகள், பிக்குணிகள் மற்றும் சாதாரண மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள், கணினிகள், கல்வி உபகரணங்கள் மற்றும் காலணிகள் வழங்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் ஆரம்பமானது.

அதன்படி, மொனராகலை, பதுளை, அனுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை, இரத்தினபுரி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளில் கல்வி கற்கும் அனைத்து பிக்கு மற்றும் மாணவர்களுக்கும் தேவையான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்காக, அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடாக 30 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஆரம்பப் பிரிவெனா இறுதிப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற 20 பிக்கு மாணவர்களுக்கு, வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ், 12 மில்லியன் ரூபா பெறுமதியான அழகியல் கலை உபகரணங்களும், பிரிவேனாக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் (www.piriven.gov.lk) என்ற உத்தியோகபூர்வ இணையத்தளமும், ஜனாதிபதியால் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# போலி ஆவணங்களை சமர்ப்பித்தவர் கைது

மோட்டார் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக போலி ஆவணங்களை சமர்ப்பித்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திகன பகுதியில் உள்ள தனியார் மற்றும் அரச வங்கி கணக்குகளில் 28 இலட்சம் ரூபா பணம் இருப்பதாக வங்கி முகாமையாளரின் கையொப்பத்துடன் கூடிய வகையில் குறித்த ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 24 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக குறித்த நபர் இவ்வாறு போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் வாரங்கள்...

இதேவேளை, உலக அளவில் ஒரு மாதத்திற்கு முன்னர் 84 ஆவது இடத்திலிருந்த இலங்கையானது நேற்று 67 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இது நாளுக்கு நாள் அதிகரிக்கும் கொரோனா நோயாளர்களினால் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையாகவுள்ளது.

இந்த நிலையில், இலங்கை நான்காவது அலையின் ஆரம்பத்தில் இருப்பதாக பேசப்படுகின்றது. ஆனால், மூன்றாவது அலையில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், கடந்த சில நாட்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் ஜூன் 23 ஆம் திகதியே இறுதியாக 2 ஆயிரத்தை தாண்டிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அதாவது, 2 ஆயிரத்து 196 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், ஜூலை 29 ஆம் திகதியான நேற்று முன்தினம் 2 ஆயிரத்தை தாண்டிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, 2 ஆயிரத்து 370 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது ஒரு மாத்திற்கு பின்னர் கொரோனா நோயாளர்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை எடுத்துக்காட்டுவதுடன், எதிர்வரும் வாரங்களில் ஏற்படும் ஆபத்தையும் எடுத்துக்காட்டியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா நோயாளர்களின் அதிகரிப்புக்கான காரணங்கள் டெல்ட்டா திரிபாக இருக்கலாம் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கைவிடுத்துள்ள போதிலும், நாட்டில் ஆங்காங்கே போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது நாட்டின் கொரோனா ஆபத்தை மேலும் அதிகரிக்க நேரிடலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், பொதுமக்களும் உரிய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிப்பதில் பொறுப்பற்று செயற்படுவதாகவும் சுகாதார அதிகாரிகள் குற்றஞ்சாட்டுவதுடன், பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் மீண்டும் நாட்டை முடக்கும் நிலைமை ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ் சமூகத்தின்...

வலியுறுத்தியுள்ளது என முரளீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களும் சமத்துவம், பாதுகாப்பு, ஐக்கியத்துடன் வாழக்கூடிய பல்லின, பல்மத, பல்மொழி சமூகம் என்ற இலங்கையின் குணாதிசயத்தை பாதுகாப்பதற்கான முயற்சிகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்து வந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல் உட்பட பல கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46ஆவது அமர்வில் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவத்திற்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான இலங்கையின் பொறுப்பை இந்தியா வலியுறுத்தியுள்ளது என முரளீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாப்பது உட்பட அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வில் ஈடுபடுவது இலங்கையின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு உதவும் என்பதையும் இந்தியா வலியுறுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு பெறுப்புக்கூறுவது உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் சாத்தியமில்லை என்பதால் இந்தியா சர்வதேச விசாரணையை ஆரம்பிக்குமா என்ற கேள்விக்கு அமைச்சர் நேரடியான பதிலை வழங்கவில்லை.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளுக்கு தீர்வை காண்பது இலங்கையின் நலன்களிற்கு உகந்த விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும், தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுமாறும் அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கான சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுமாறும் இந்தியா வலியுறுத்தியுள்ளது என முரளீதரன் தெரிவித்துள்ளார்.

## ஓகஸ்ட் 2ஆம்...

ஊழியர்களைக் கடமைக்கு அழைத்தல் மற்றும் வீட்டிலிருந்து பணிபுரியும் வகையில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் அனைத்தும் இரத்து செய்யப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில், கொரோனா தடுப்பூசிகளை வழங்கும் செயற்றிட்டத்தினூடாக, குறிப்பிட்டளவான மக்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பெருமளவான அரச ஊழியர்கள் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளதாகவும், அரச சேவையினை வழமை போன்று முன்னெடுத்துச் செல்வதற்கு முன்னுரிமையளிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு கூறியுள்ளது.

## சீனாவில் பரவும்...

9.3 மில்லியன் குடியிருப்பாளர்களும் - அங்கு வருகை தருபவர்கள் உட்பட அனைவரும் பரிசோதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் முகமூடி அணியவும், ஒரு மீற்றர் இடைவெளியில் நிற்கவும், வரிசைகளில் காத்திருக்கும் போது ஏனையோருடன் பேசுவதைத் தவிர்க்கவும் அந்நாட்டு அதிகாரிகள் மக்களுக்கு வலியுறுத்தியுள்ளனர்.

## இலங்கை அகதிகளுக்கு...

தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் என்ன பிரச்சினை இருக்கின்றது? அவர்களது மனுவை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த உத்தரவை எதிர்த்து தற்போது உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தலைமை நீதிபதி அமர்வு முன் மத்திய அரசு மேன்முறையீடு செய்திருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் விசாரணையில் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த அகதிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்றும் சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க முடியாது என்றும் இந்திய ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.



# 417 ஆமைகளுடன் 473 கடல்வாழ் உயிரினங்களை காவுகொண்ட எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல்



தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து இரசாயன திரவங்களும், எரிபொருளும் கடல் நீரில் கலந்துள்ளமை நேற்று (30) நீதிமன்றத்தில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. கடல்நீரின் மாதிரிகள் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் பரிசோதிக்கப்பட்டபோது இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் நாயகம் மாதவ தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இரசாயனத் திரவங்கள் கடலில் கலந்ததை அடுத்து, இதுவரை 417 கடலாமைகளும், 48 டொல்பின்களும், 8 திமிங்கிலங்களும் உயிரிழந் துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதென பிரதி சொலிசிட்டர் நாயகம் மன்றில் சுட்டிக்காட் டியுள்ளார்.

கப்பல் தீப்பற்றிய சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்னெடுத்து வரும் விசாரணைகள் குறித்து, கப்பல் நிறுவனத்தின் உள்நாட்டு நிறுவனம், அதன் அதிகாரிகள் மற்றும் கெப்டன் உள்ளிட்ட நிர்வாகக்குழுவினர் சார்பில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகள், பொறுப்பற்ற வகையில் அறிக்கைகளை வெளியிடுவதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதுடன், அவ்வாறான கருத்துகளுக்கு தமது திணைக்களம் கண்டனம் தெரிவிப்பதாகவும் பிரதி சொலிசிட்டர் நாயகம் நேற்று (30) நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பணமோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

கொரியாவில் வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பகுதியைச் சேர்ந்த இருவரிடம் இவ்வாறு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி 31 இலட்சம் ரூபா பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் வதிவிடமாக பேராதனை, ஜாஎல, நீர்கொழும்பு மற்றும் முருதலாவ போன்ற பல்வேறு பகுதிகளைக் கூறியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

55 மற்றும் 26 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவர்களை 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவி டப்பட்டுள்ளது.

# போதைப்பொருளுடன் வாழைச்சேனையில் நால்வர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை, பனிச்சையடி வீதியிலும் நாவலடியிலுமாக கொழும்பைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரியுடன் 4 இளைஞர்கள் நேற்று முன்தினம் (29) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே கொழும்பைச் சேர்ந்த போதை வியாபாரியுடன் 24, 25, 28, 28 வயதுகளையுடைய நான்கு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 2 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கொழும்பு நபர் கொழும்பிலிருந்து ஐஸ் போதைப்பொருட்களைக் கொண்டு வந்து இப்பிரதேசத்தில் இளைஞர்கள் ஊடாக விநியோகித்து வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த நபரையும் இளைஞர்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், வாழைச்சேனை பொலிஸாரும் இவர்களுடன் தொடர்புடைய நபர்களைத் தேடி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 31.07.2021 சனிக்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** — விரும்பிய தொழில் நிதி ஒதுக்கீடுகள் செய்யலாம். வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டை மீறவேண்டாம். உடல்நலக்குறைவானவர்களுக்கு சிறிய முன்னேற்றம் உண்டாகும். நிலைமைகளை அமைதியாக அவதானித்து தகவல் தொடர்புகளில் இருப்பது நன்மை.

**ரிஷபம்** — பணிகளில் திறமைகளை வெளிப்படுத்த தருணங்களை உருவாக்கி கொள்ளலாம். பண வரவுகள் அதிகரிக்கும். மனத்தை இறைவணக்கத்தில் இருத்தி, இணக்கம்/அமைதிக்கு வழி வகுக்கலாம்.

**மிதுனம்** — வேலை தேடுவோர் நேர்முகத் தேர்வுக்கான பயிற்சிகளில் கவனம் செலுத்துவது நன்மை. தொழில் நிறுவுனர்கள் பணியிடப் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். திருமணமான உறவுகளால் இல்லத்தில் மகிழ்ச்சியுண்டாகும். பண விடயங்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பது நன்மை. ஒரு பயணம் மகிழ்ச்சியைத் தரும். காதலர்களுக்கு இனிமையான நாள்.

**கடகம்** — வாழ்வின் வளமைக்கு பண வரவுகள் அதிர்ஷ்டமாகவோ அல்லது வெகுமதியாகவோ கிடைக்கப் பெறலாம். வீட்டுப் பிரச்சினைகளுக்கு உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பது நன்மை. மாணவர்களுக்கு கல்வியில் நல்ல நிலைமை தோன்றும். பணியிடங்களில் கவனம் தேவைப்படலாம்.

**சிம்மம்** — முயற்சிகளின் கனவுகள் நனவாகலாம். எதிர்பாரா வெற்றிகளும் கிடைக்கப் பெறலாம். உணர்வுபூர்வமான செயல்களைத் தவிர்ப்பது நன்மை. பங்குச்சந்தை வர்த்தகம் நன்மை பெறும். கடனாகக் கொடுத்த பணம் கிடைக்க பெறலாம். பழைய நட்பு மீண்டும் தொடரும்.

**கன்னி** — வருவாய் அதிகரிக்கும். பணியிடங்களில் பிரச்சினைகள் தவிர்ந்து அதிகாரமும் உண்டாகலாம். உங்களை உணராத நட்புகளிலிருந்து விலகி இருப்பது நன்மை. அனைத்து முயற்சிகளிலும் கிரக நிலைகளும் நன்மை தரும்.

**துலாம்** — சிறிய நிதியில் சுயமாக செய்யும் தொழிலில், ஏற்றமும் இலாபங்களும் உண்டாகும். இல்ல சூழ்நிலை மகிழ்ச்சியில் மனவுறுதி உண்டாகும். மிக அவசர தேவைகளுக்கு மட்டுமே கடன் வாங்கலாம். இயலுமான வரை இந்த வாரத்தில் கடன் பெறுவதை தவிர்க்கலாம். சகோதரர்களின் ஆதரவு நன்மை தரும்.

**விருச்சிகம்** — புதிய முடிவுகளை/திட்டங்களை செயற்படுத்துவதில் நன்மையில்லை. அது இலாபம் தரும் என்று உறுதியாக அறிந்தால் மட்டுமே செயல்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனமாக இருப்பது நன்மை. கடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.

**தனுசு** — வருமான வரி/ வருவாய் சம்பந்தப்பட்டவைகளில் கவனம் தேவைப்படலாம். பணிகளில் நிதானமும், பணிவும் தேவை. பொருளாதாரம் மேம்படும். மாணவர்கள் கல்வியில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது வெற்றி தரும்.

**மகரம்** — பணிகளில் புதிய மாற்றங்கள் உண்டாகும். வியாபாரப் பயணங்கள் சிறந்த வெற்றி தராது. பண விடயங்களில் முயற்சி தேவைப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கலாம். தம்பதியரிடையே ஆதரவு அனைத்து விடயங்களும் நிறைவேறத் துணை நிற்கும்.

**கும்பம்** — வார இறுதி நாட்கள் திருப்தியான ஓய்வைத் தரும். புதிய முதலீட்டுக்கான நல்ல காலம். காதலர்களுக்கு இனிமை. பண வரவுகள் மகிழ்ச்சி தரும். வியாபார பங்குதாரர்களிடம் கடும்போக்கு வேண்டாம்.

**மீனம்** — கர்மாதிபதி விரய ஸ்தானத்தில் இருப்பதால் தொழில்/ பணியிடப் பிரச்சினைகள் எளிதில் வராது. வந்தாலும் பிரச்சினைகள் தோல்வி பெறும். பண வரவுகளின் அறிகுறிகள் தென்படும். உங்களின் செயல்களில் நண்பர்களின் உதவி கிடைக்காது.

# தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில்

## அதன் விளைவே 16 வயது சிறுமியின் மரணம் என்கிறார் அஷ்ரப் அஸீஸ்

(செ. நித்தியானந்தன்)

தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பொருளா தார கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். அதனால் ஏற்பட்ட விளைவே 16 வயது மலையக சிறுமியின் மரணம் என அஸீஸ் ஜனநாயக காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அஸீஸ் தனது அறிக்கையில் தெரிவிததுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இது முதல் ஹிஷாலினி மட்டும் அல்ல, கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங் களில் எதிர்காலத்தில் குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார கஷ்டங்களை கருத்தில்கொண்டு இவ்வாறு கூலிவேலைக்கு செல்லக்கூடும். அது தவிர்க்கப்பட வேண்டுமானால் அரசாங்கத்தால் மலையகப் பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டு தோட்ட இளைஞர் - யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியளித்து அப்பகுதியில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் வெளியிடங்களுக்கு சென்று வேலை செய்வதைத் தவிர்க்க முடியும்.

அத்துடன் தோட்டப் பிள்ளைகளுக்கு திறமையான கல்வியை வழங்க அரசாங்கம் தவறும் பட்சத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாது.

இச்சிறுமியின் மரணம் தொடர்பாக மேற் கொண்டு வரும் விசாரணை அரசியல் அழுத்தங் களுக்கு அடிப்பணியாமல் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தாருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் கடமையாகும். தோட்டப் பிள்ளைகளின் குடும்பத்தினருக்கு வீடு, கல்வி, சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இத்தேவைகளைக் கண்டறிந்து அதனைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு மலையக அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றது.

மறுபக்கத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு கிடைக்கும் சம்பளத்தில் தமது வாழ்வாதாரத்தை நடத்த பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அவர்கள் சேவைக் கேற்ற ஊதியம் வழங்கப்படுமானால் அவர்களின் வாழ்க்கையில் எவ்வித பிரச்சினையும் இருக்கா தென அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் இளைஞர்களை தாக்கிய நான்கு பெண்கள் உட்பட ஐவர் கைது

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களை தாக்கி, சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் நான்கு பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நவாந்துறை பகுதியில் புறா வளர்த்த இரண்டு இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியதையடுத்து, ஏற்பட்ட முரண்பாட்டு சூழலில் பெண்கள் குழுவொன்று சமரசம் பேச வந்த இளைஞர்கள் நான்கு பேரை தாக்கியதுடன், அவர்களின் முகங்களில் மிளகாய் தடவி சித்திரவதை புரிந்த காட்சிகள் காணொளியாக சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டிருந்தன.

பெண்களின் சித்திரவதைக்குள்ளான இளைஞர்களில் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில பெண்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினொன் இமற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று நேற்று அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கனடா இல்லத்தில் இடம்பெற்றது.

# கல்முனை பிராந்தியத்தில் ஒரே நாளில் 42,800 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு இரண்டாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசி ஏற்றலில் மீண்டுமொரு சாதனையை நிகழ்த்தியுள்ளதாகவும் நேற்று முன்தினம் (29) 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 42,800 பேர் தடுப்பூசி ஏற்றியுள்ளரெனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்தியத்தில் ஒரே நாளில் ஏற்றப்பட்ட மிக அதிக எண்ணிக்கை இதுவென் றும் கல்முனைப் பிராந்தியத்திற்கு இறுதிக் கட்டத்தில் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் பல மாவட்டங்களை பின்தள்ளி முன் நிற்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

எமது சுகாதார உத்தியோகத்தர்களின் அர்ப் பணிப்புடனான சேவை, குழுச்செயற்பாடு, இணைந்து கடமையாற்றல், தீர்மானங்களை நிறைவேற்றல், பொதுமக்கள் திணைக்களத் தலைவர்களின் ஒத்துழைப்பு ஆகியனவே வெற்றிக்குக் காரணமாக அமைந்ததையும் குறிப்பிட்டார்.

எமது இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றல் பணி தொடர்ந்து இடம்பெறுவதாகவும் மிக விரைவில் இந்தப் பிராந்தியத்திலிருந்து கொடிய கொரோனாவை துரத்தியடிப்போமெனவும் சூளுரைத்தார். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை துரிதமாக செயற்படுவதோடு, பத்திரிகை அறிக்கையையும் வெளியிட்டு வருகின்றன.

மொத்தமாக கல்முனைப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மொத்த சனத்தொகை 4 இலட்சத்து 88 ஆயிரத்து 343 எனவும், தடுப்பூசி பெறத் தகுதியானோர் 23,88,015 எனவும் நேற்று முன்தினம் (29) செலுத்திக்கொண்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 840 எனவும் தெரிவித்துள்ளது.

# கல்முனையில் மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கிவைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.என்.எம்.அப்றாஸ்)

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சமுர்த்தி பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மாணவர்களுக்கான சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைபீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நேற்று (30) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொடுப்பனவு சான்று பத்திரங்களை வழங்கிவைத்தார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் சித்தி யடைந்து, உயர்தரக் கல்வியை தொடர்கின்ற மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புக்காக சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு அரசாங் கத்தினால் வழங்கப்படுகின்றன.

கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இருந்து 245 மாணவர்கள் இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட் டுள்ளனர். இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யூ.எல் ஜவாஹீர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்சான், சமுர்த்தி வங்கி முகாமையாளர் மோசஸ் புவிராஜ், கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.


இந்த வார
தமிழ் முரசு
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
இதழில்

- இணையத்தில் தமிழுக்கு சாம்ராஜ்யம் தந்த மயூரநாதன்
- இப்போதைய தலைமுறையினரும் நடனத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் செயற்படுகின்றனர் - துர்ஷானி ஜீவிதன்
- முயற்சியையும் தேடலையும் வேண்டியே பயணிக்கின்றேன் - அறிவிப்பாளர் ரமேஷ்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 31ஆம் திகதி, சனிக்கிழமை

# நியாயமான எதிர்ப்பு!

இலங்கையில் பரவிவரும் டெல்ட்டா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் குறைந்தளவு பலனளிக்கூடிய – மிகவும் பெறுமதியான சினோவக் தடுப்பூசியை கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து சுகாதாரத்துறையை சேர்ந்தவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

13 மில்லியன் டோஸ் சினோவக் தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதற்கே இந்த எதிர்ப்பு எழுந்துள்ளது.

சினோவக் தடுப்பூசி 15 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் பெரியதொகை என சுகாதாரத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஏனைய தடுப்பூசிகள் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படுவதையும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை மருத்துவர்கள் இந்த தடுப்பூசியின் செயல்திறன் மிகவும் குறைவானது என்றும் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவக் தடுப்பூசியை உலக சுகாதார ஸ்தாபனம் அவசர பயன்பாட்டிற்காக அனுமதித்துள்ளபோதிலும், இந்த தடுப்பூசி டெல்ட்டா வைரஸுக்கு எதிராக எவ்வளவு தூரம் பயனளிக்க கூடியது என்பது குறித்து எதுவித தரவுகளும், புள்ளிவிபரங்களுமில்லை.

சிலியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மாத்திரமே உள்ளன என தெரிவிக்கும் உள்ளூர் நிபுணர்கள், அந்த ஆய்வு தடுப்பூசியின் நோய் எதிர்ப்பு சக்தி குறித்து திருப்திகரமான முடிவுகளை வெளியிட்டுள்ளது. ஆனால், டெல்ட்டா கொரோனா வைரஸுக்கு எதிராக இந்த தடுப்பூசி எவ்வாறு செயற்படும் என்பது குறித்து அந்த ஆய்வில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

டெல்ட்டா கொரோனா வைரஸுக்கு எதிராக சினோவக் எவ்வாறு செயற்படுகின்றது என்பது குறித்து பாரியளவிலான மருத்துவ பரிசோதனைகள் அல்லது நிஜ உலக பயன்பாடுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள், புள்ளிவிபரங்கள் எதுவுமில்லாததும் குறிப்பிடத்தக்கது.

தாங்கள் தெரிவித்த ஆலோசனைகள் தங்களின் கண்டுபிடிப்புகள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொவிட் மருந்துகள் தொடர்பான ஆலோசனை குழுவிலிருந்து 3 மருத்துவர்கள் ஏற்கனவே பதவி விலகியுள்ளனர். சினோவக்கை அவசர பயன்பாட்டிற்கு அனுமதிப்பது தொடர்பிலேயே இவர்கள் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் உட்பட ஏனைய தடுப்பூசிகள் தொடர்ச்சியாகக் கிடைத்து வருவதால் சினோவக்கினை கொள்வனவு செய்யவேண்டிய அவசியமில்லையென கொரோனா மருந்துகள் தொடர்பிலான ஆலோசனைக்குழுவின் எட்டு உறுப்பினர்களும் ஏகோபித்த குரலில் தெரிவித்துள்ளனர்.

ஆலோசனைக் குழுவின் நான்கு உறுப்பினர்கள் இலங்கை சிறிய எண்ணிக்கையிலான சினோவக்கினைக் கூட கொள்வனவுசெய்யக்கூடாது என்று தெரிவித்துள்ள அதேவேளை, சிறிய எண்ணிக்கையிலான சினோவக்கினைக் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு வழங்கலாமென ஏனைய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், தற்போது இலங்கைக்கு தடுப்பூசி தொடர்ந்தும் கிடைப்பதால் சினோவக்கினை கொள்வனவு செய்யவேண்டிய அவசியமில்லையென எட்டு உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை சுகாதார நிபுணர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் விதத்தில் 13 மில்லியன் டோஸ் சினோவக்கினை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக செய்திகள் சொல்கின்றன. இது ஒரு மோசமான நடவடிக்கை எனத் தெரிவித்துள்ள சிரேஷ்ட சுகாதார அதிகாரியொருவர் நாட்டில் டெல்ட்டா வைரஸின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்தத் தடுப்பூசியின் செயல்திறன் கேள்விக்குரிய விடயம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உலகின் ஏனைய நாடுகளில் சினோவக் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி ஆறு மாதங்களில் குறைவடைந்துள்ளதால், அவர்கள் மூன்றாவது பூஸ்ட்டை செலுத்திக்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை அதை வைத்து வியாபாரம் நடப்பது வாடிக்கையாகி இருக்கிறது. முகக்கவசங்கள் முதல் தடுப்பூசிகள் வரை எல்லாம் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டே நடக்கின்றன. அதனால்தான் சுகாதாரத்துறையினர் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அந்த எதிர்ப்பில் ஒரு நியாயம் இருக்கிறது.

# சொல்லப்படாத கதைகளும் காட்டப்படாத கதாபாத்திரங்களும்

# அட்டக்கத்தி முதல் சார்பட்டா வரை



இட்லியாக இருங்கள் என்ற சொலவடை எத்தனை பெரிய அபத்தம். அது யாருக்கு சொல்லப்பட்டது என்று தெரியவில்லை. 'குழியில் ஊற்றினாலும் வெந்து உப்பி வெளியே வாருங்கள்' என்ற உவமேயமும், 'எல்லா பக்கங்களும் ஒரே மாதிரியாக இருங்கள்' என்ற உவமையும் வாசிக்க மட்டும் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆனால், நிதர்சனத்தில் அடியில் வைத்த சூட்டுக்கு ஏற்ப வெந்த தோசைகளாகத்தான் எல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் தமிழ் சினிமா எனும் தோசையின் ஒரு பக்கத்தை பார்த்து ருசித்துவந்தவர்கள் 'அட்டக்கத்தி'க்கு பிறகு மறுபக்கத்தின் சுவையை அறியத் தொடங்கியுள்ளனர் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மறுபக்கம் 'சார்பட்டா' திரைப்படத்தில் மொறுமொறுவாகத் தொடங்கியுள்ளது.

**சார்பட்டா: ரோஷமான குத்துச்சண்டை வீரனின் வாழ்வியல் அனுபவம்**

கலையின் தொடக்கமே அரசியல்தான். சினிமா கலையின் ஓர் அங்கம். அதில் ஆரம்பம் முதலே நாம் பரவலாக அரசியல் பேசி வருகிறோம். ஆனால், எந்த அரசியலுக்கானதாக அந்தக் கலை மாறியது என்ற கேள்வி காலம் செல்லச் செல்லதான் எழுந்தது.

அனைத்து தரப்பினருக்குமான அரசியல் கலையின் வாயிலாக பேசப்பட்டது என்றாலும், அது மற்றவர்களால் ஏற்கப்பட்டதா அல்லது விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டதா என்பதே கேள்வி.

தமிழ் சினிமாவில் அரசியல் திரைப்படங்கள் அவ்வப்போது தலைகாட்டியிருந்தாலும், அதே கருத்தியலில் பயணித்துத் திரைப்படங்களை இயக்கும் படைப்பாளிகள் அவ்வளவாக உருவாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

90 ஆண்டுகால தமிழ் சினிமா வரலாற்றில் அரசியல் படம் என்றாலே பெரும்பாலும் மணிவண்ணன் மட்டுமே எல்லோருக்கும் நினைவுதட்டுகிறார். சினிமாவை தொடர்ந்து கவனிப்பவர்களும் செல்வமணி, வேலு பிரபாகரன், எஸ்.பி.ஜனநாதன், ராஜுமுருகன் போன்ற சில படைப்பாளிகளை மட்டுமே சினிமா வாயிலாக அரசியல் பேசும் படைப்பாளிகளாக விரல் விட்டு எண்ணுவார்கள்.



**இது நம்ம காலம் – சார்பட்டா பரம்பரை**

பொதுப்புத்தி அரசியல் படங்களை இயக்கும் ஷங்கர், ஏ.ஆர்.முருகதாஸ் போன்ற முன்னணி இயக்குநர்களிடையே பெரியாரிசம், கம்யூனிசம், தமிழ்த் தேசியம், இந்துத்துவம், பெண்ணியம் போன்றவற்றை இழையாகக் கொண்ட திரைக்கதைகளைக் கட்டமைத்து படங்களை இயக்கும் படைப்பாளிகள் தலைமுறைக்குத் தலைமுறை உருவாகிக்கொண்டுதான் உள்ளனர். ஆனால், அவர்கள் தீரத்தோடு அவற்றைக் கையாளவில்லையோ என்றுதான் தோன்றுகிறது.

சினிமா அழகியலைத் தவிர்த்துவிடக்கூடாது என்பதற்காக சொல்ல வந்த அரசியல் கருத்தியலைத் தெளிவாக பேசாமலேயே முடிந்த திரைப்படங்களும் உண்டு. எடுத்துக்கொண்ட சித்தாந்தத்தைப் பேச வேண்டும் என்று சினிமாவுக்கு உண்டான அழகியலைத் தவறவிட்டு பிரசாரங்களாக மாறிப்போன படங்களும் உண்டு.

அரசியல் நிலைப்பாட்டுடன் திரை மொழியைச் சரிவிகிதமாகக் கையாளாத திரைப்படம் தேக்கமடைந்துவிடுகிறது. அதனை எடுக்கும் படைப்பாளியும் வணிகரீதியாகப் பின்தங்கிவிடும் நிலைதான் உள்ளது. இவ்வாறு பின்தங்கும் படைப்பாளிகள் ஓரிரு படங்களுடன் தேங்கிவிடும் சூழல்தான் படைப்புகளுக்கு உண்டான துரதிர்ஷ்டம்.

**சார்பட்டா பரம்பரை – ஷார்ப்பான களம்**

தமிழ் சினிமாவில் அரசியல் திரைப்படங்களை எடுத்தால் அதிக அளவிலான விமர்சனங்களையும், நேரடியான எதிர்ப்பையும், வணிக ரீதியான பின்தங்கலையும் எதிர்கொள்ள அஞ்சியே பெரும்பாலான கதைகள் திரைவடிவம் பெறாமலேயே நின்றுவிட்டன. திரைவடிவம் பெற்ற பின்பும், அவை வெளிவராத சூழலில் சிக்குண்ட அரசியல் படங்களும் உள்ளன.

இப்படிப்பட்ட சூழலில் எடுத்துக்கொண்ட அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விலகாது சோதனை முயற்சியில் வெளிவந்த திரைப்படம்தான் அட்டக்கத்தி. புறநகர்ப் பகுதி மக்களை பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்டு பகடி நாயகன் மூலம் காதல் மீது இருந்த புனிதத்தன்மையை நோக்கி கேள்வி எழுப்பிய படம். ஆனால், படம் முழுக்க நிராகரிப்பின் வலி நிழலாடிக்கொண்டே இருக்கும்.

அதுவரையிலான தமிழ் சினிமாவில் ரௌடிகளாகவும், சமூக விரோதிகளாகவும், கல்வியில் பின்தங்கியவர்களாகவும், திருத்தப்பட வேண்டியவர்களாகவும் காட்டியே பழக்கப்பட்ட சினிமாவிற்கு, அட்டக்கத்தி புதிய திரை மனிதர்களை அறிமுகம் செய்து வைத்தது.

அம்பேத்கர், அயோத்திதாசர், சாவித்ரிபாய் புலே ஆகியோரது பெயர்களும், படங்களும் சிறைகளிலும், நீதிமன்றங்களிலும் மட்டுமே காட்டி பழக்கப்பட்ட தமிழ் சினிமா, அம்மனிதர்களின் நிஜ வாழ்வின் தேவைகளிலும் அவர்களின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டியது.

சமூக பாதிப்புகளிலிருந்து உருவாகும் படைப்புகள்தான் மெருகேற்றாத உண்மையான வரலாற்றைத் தாங்கி நிற்கும் என்பதை அதன் பிறகு வந்த 'மெட்ராஸ்' திரைப்படம் நிரூபித்தது. வடசென்னை மக்களை அரசியல்வாதிகள் கைப்பாவையாகப் பயன்படுத்திக்கொள்வதைப் படம் பேசியது.

இவ்விரண்டு படங்களையும் இயக்கிய இயக்குநர் பா.ரஞ்சித், ரஜினி போன்றதொரு பெரிய பிம்பம் கிடைத்தும், தனது அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விலகாது இயக்கிய மூன்றாவது படம்தான் 'கபாலி'.

தலித் அரசியலை மையமாக வைத்து எழுதப்படும் திரைக்கதைகள் வணிக ரீதியில் கல்லா கட்டாது என்ற தமிழ் சினிமாவின் எழுதப்படாத சரித்திரத்தை மாற்றி அமைத்தது. சினிமாவிற்கு சொல்லப்படாத கதைகளும், காட்டப்படாத கதாபாத்திரங்களும்தான் முக்கியமே தவிர மனிதர்கள் அல்ல.

மதவாதத்துக்கு எதிரான அரசியல் திரைக்கதையை ஒரு பெரிய நடிகரை வைத்தே இயக்கி, பொருத்தமான திரை அழகியலுடன் அதனை வணிக ரீதியாக வெற்றி பெறவும் செய்ததற்கு உதாரணமாக நிற்கிறது காலா.

மக்களை அரசியல்படுத்த வேண்டுமென்றால் நேரடியாக அரசியல் பேச வேண்டும். சினிமாவைக் கருவியாகக் கொண்டு தன் தரப்பு வாதத்தை எடுத்து வைக்கும் இயக்குநர் பா.ரஞ்சித் இயக்கத்தில் வெளிவந்துள்ளது 'சார்பட்டா பரம்பரை.'

முன்பு சொன்னதுபோல் சினிமா எனும் கலைக்கு சொல்லப்படாத கதைகளும், காட்டப்படாத கதாபாத்திரங்களும்தான் முக்கியமே தவிர வேறு எதுவுமல்ல. கலைத்தன்மைக்கு சமரசமின்றி உருவாகும் எந்த அரசியல் படைப்பும் பலதரப்பட்ட மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுதான் தமிழ் சினிமாவின் அந்த இன்னொரு பக்கம்.

அந்தப் பக்கத்தில் தற்போது இளம் தலைமுறை படைப்பாளிகள் ஏராளமானோர் பயணிக்கத் தொடங்கியுள்ளது ஆரோக்கியமான சூழலையே காட்டுகிறது. எல்லோரது கதைகளும் ஆவணமாக்கப்பட வேண்டும். எல்லோரது அரசியலும் விவாதிக்கப்பட வேண்டும்.

**நன்றி – இணையம்**

# டயகம தோட்டத்தில் பெரும் சோகம்; சிறுமியின் சடலம் தோண்டியெடுப்பு












படங்கள்: எம்.கிருஸ்ணா, க.கிருஷாந்தன்

## பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களின் நியமனம் குறித்து தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கம் பிரதமருடன் பேச்சு

(கினிகத்தேனை, மஸ்கெலியா நிருபர்கள்)

அதிபர் ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு உட்பட அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்த விடயங்களையும், குறிப்பாக பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களின் நியமனம் தொடர்பாகவும் தாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றிருப்பதாக தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பாலசேகரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆசிரிய அதிபர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாகவும், ஏனைய இன்னும் பல கோரிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் அதிபர்கள் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கத்துடன் கடந்த 27ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாகவும், மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனநாயக ஆசிரிய சங்கம் சார்பில் பின்வரும் விடயங்களை பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம்.

அவற்றில் அதிகரித்து வரும் வாழ்க்கை செலவுகளுக்கு ஏற்ப ஆசிரியர்களுக்கு வருமானம் போதாமல் உள்ளது. இதனால் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் அதிகமான கடன்களைப் பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாத ஒரு நிலை தற்போது ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலைமைகளை கருத்திற்கொண்டு நீண்ட காலமாக இழுபறியில் இருக்கும் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு உதவுமாறும் மேலும், ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் நீண்ட காலமாக வழங்கப்படாமலிப்பதாலும் அந்த சம்பள நிலுவையை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தோம்.

அத்துடன் நீண்ட காலமாக ஆசிரிய விடுதிகளிலும், வாடகை வீடுகளிலும் வசிக்கும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். சில நேரங்களில் பாடசாலை விடுதிகளில் கடந்த காலங்களில் இருந்த குறித்த ஆசிரியர் அல்லது அதிபர் அவர் சார்ந்த குடும்பத்தினர் எங்கு செல்வது என்று தெரியாத ஒரு அவலநிலை காணப்பட்டது.

மேலும், பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்கள் மாதாந்தம் பத்தாயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்று அவர்கள் தமது வாழ்க்கை செலவுகளுக்கு ஏற்ப தமது குடும்பத்தினை நடத்திச் செல்ல முடியாத ஒரு அவலநிலையில் வாழ்கின்றனர்.

அத்துடன் மாதாந்தம் பத்தாயிரத்தை சம்பளமாகப் பெறும் அவர்கள் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து இரண்டு வருடங்கள் கடந்தும் அவர்களுக்கு இன்னும் நிரந்தரமாக ஆசிரியர் தரம் 3 ஒன்றுக்கு உள்வாங்கப்படவில்லை,

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் சுற்றுநிருபங்கள் முறையாக பின்பற்றப்படவில்லை. அத்துடன் அதிபர்களுக்காக இதுவரை ஒரு சுற்று நிருபம் தயாரிக்கப்படாமலிருப்பது தொடர்பான விடயங்களை பிரதமர் மற்றும் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்.

இதன்போது அதிபர் ஆசிரியர் சங்கங்களும் தங்களுடைய கருத்துகளை முன்வைத்தார்கள். இவற்றையெல்லாம் செவிமடுத்த பிரதமர், அதிபர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை தான் நன்கு அறிந்திருப்பதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை அதாவது 2ஆம் திகதி கல்வி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவைப் பத்திரத்தில் தாமும் ஆதரவை வழங்கி இதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதாக தெரிவித்த அவர் நாட்டில் தற்போதைய நிலமையினை கவனத்திற்கொண்டு இயன்றளவு விரைவில் ஒரு சாதகமான தீர்வினைப் பெற்றுத்தர இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்ததாக தேசிய ஜனநாயக ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

## குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு



(மஹிந்த குமார்)

பலாங்கொடை விக்கிலிய தோட்டத்தில் வசிக்கும் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக குடிநீரின்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

எனவே, இந்த விடயமாக பலாங்கொடை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான அகில சாலிய எல்லாவலவின் கவனத்திற்கு கொண்டு வந்ததற்கிணங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் அமைச்சினுடாக 10 கோடி ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ஆயிரத்து 700 குடும்பங்கள் நன்மையடையவுள்ளனர். இத்திட்டமானது விக்கிலிய தோட்டத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சமனலவேவ வாவியிலிருந்து நீர் பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடிக்கல் நாட்டு விழாவில் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், பலாங்கொடை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

## உயிரிழந்த மலையக சிறுமி தொடர்பில் அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் விசேட கலந்துரையாடல்

(தலவாக்கலை)

அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவர் மருதபாண்டி ராமேஸ்வரன் தலைமையில் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மலையகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள இஷாலினியின் மரணம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வயது குறைந்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடை விலகி தொழிலுக்கு செல்வதை தடுப்பது தொடர்பாகவும், கட்டாயக் கல்வி முறைமையை அவர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் விசேடமாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தல் மூலோபாயங்கள் மற்றும் தடுப்பூசிகளை அனைவருக்கும் உரிய முறையில் வழங்குவது தொடர்பாகவும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் அம்பகமுவ (பதில்) பிரதேச செயலாளர் சாலிக்கா லிந்தக்கும்புர, பிரதேச அபிவிருத்திக்குழு உப தலைவர் எஸ்.என். ரத்னாயக்க, நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் ரவி குழந்தைவேல், மஸ்கெலியா பிரதேச சபைத் தவிசாளர் கோவிந்தன் செண்பகவள்ளி, ஹட்டன் டிக்கோயா நகர சபைத் தலைவர் பாலச்சந்திரன், அம்பகமுவ பிரதேச சபைத் தலைவர் ஜயசங்க பெரேரா, அரச திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.



கொத்தலாவல பல்கலைக்கழக சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பதுளை நகரில் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டமானது பதுளை பஸ் நிலையம், ஊவா மாகாண சபை, ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் சாலையின் இருபுறமும் நடைபெற்றது. (படம்:- ஹாலிஎல)




அதிக வட்டி அறவிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிங்கள ராவய அமைப்பு கொழும்பிலுள்ள மத்திய வங்கிக்கு எதிரில், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

# மனித உரிமை ஆணைக்குழு எங்களை விலை பேசுகிறது

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் குற்றச்சாட்டு




(மன்னார் நகர் நிருபர்)

மனித உரிமை ஆணைக்குழு தங்களை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு விலை பேசுவதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி இம்மானுவேல் உதயச்சந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் தந்தை சில்வாவின் சிலைக்கு எதிரில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட நிலையிலேயே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் உறவுகள் ஆகிய நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்க வேண்டுமெனவும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம்

12 வருடங்களாக போராடி தனிப்பட்ட விதமாக நான்கு வருடங்கள் போராடி இதுவரை அரசாங்கத்தினால் எதுவித பதிலும் கிடைக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் ஊடாக எந்தப் பொறிமுறையும் கிடைக்காது. எனவே, நாங்கள் சர்வதேச சமூகத்திடம் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து வருகிறோம். மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. எனினும், அது எந்த ஒரு பிரயோஜனமும் இன்றி காணப்படுகிறது.

எந்த அமைப்புக்களாக இருந்தாலும் சரி, அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தோடு சேர்ந்து வேலை செய்பவராக இருந்தாலும் அனைவரும் எங்களுக்கு பின்னால் நில்லுங்கள். எங்கள் உணர்வுகளை மதியுங்கள்.

மனித உரிமை ஆணைக்குழு இன்று எங்கள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு விலை பேசுகின்றன. அரசாங்கத்துடன் இணைந்து எங்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்பதனால்தான் நாங்கள் தனித்துப் போராடுகின்றோம். அரசாங்கத்தினால் எந்த நன்மையும் இல்லாமையால் தான் நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். எனவே, எந்த அமைப்பாக இருந்தாலும் எங்கள் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன், எங்களுக்கு தோள் கொடுத்து எங்கள் உணர்வுக்கு மரியாதை கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

# கியூப தூதுவருக்கும் வெளிநாட்டு அமைச்சருக்குமிடையில் சந்திப்பு

இலங்கைக்கான கியூபாவின் புதிய தூதுவர் அண்ட்ரஸ் மார்செலோ கொன்சலஸ் கரிடோ, வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நேற்று முன்தினம் வெளிநாட்டு அமைச்சில் வைத்து சந்தித்தார். இலங்கைக்கு பலதரப்பட்ட அரங்குகளில், குறிப்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தொடர்ந்தும் ஆதரவு நல்குதல் மற்றும் ஒத்துழைப்புக்காக கியூப அரசாங்கத்துக்கான பாராட்டுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பில் வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.



2004ஆம் ஆண்டில் ஆசியாவில் ஏற்பட்ட சுனாமியைத் தொடர்ந்து இலங்கைக்கு நல்கிய கணிசமான உதவிகளை நினைவு கூர்ந்த அவர், கடந்த ஆண்டு கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின்போது ஹைட்டியில் சிக்கித் தவித்த இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ உதவிகளுக்காக கியூப அரசாங்கத்துக்கு நன்றிகளைத் தெரிவித்தார். கியூபா மற்றும் இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து வெளியுறவு அமைச்சருக்கு தூதுவர் விளக்கினார்.

இலங்கை மற்றும் கியூபாவுக்கிடையே அனைத்து மட்டங்களிலும் நிலவும் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில், இலங்கையில் மருந்து மற்றும் தடுப்பூசி உற்பத்தி, தேங்காய் மற்றும் கரும்பு விவசாயம் உட்பட ஸ்பானிய மொழிக் கற்கைகளில் மேலும் ஒத்துழைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் மற்றும் பலதரப்பட்ட இருதரப்பு விடயங்கள் குறித்தும் வெளிநாட்டு அமைச்சர் தூதுவருடன் கலந்துரையாடினார்.

# 2000 ஏக்கர் வயல் நிலங்களை எல்லையிட்டு விடுவிக்க நடவடிக்கை

## திலீபன் எம்.பி. தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

கைவிடப்பட்ட 2000 ஏக்கர் வயல் நிலங்களை எல்லையிட்டு விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அவிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தெரிவித்தார்.

வனவளத் திணைக்களத்தினர் வசமுள்ள பொதுமக்களுக்கான காணிகள் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்போது ஒரு மாத காலத்திற்குள் விடுவிக்கப்படவேண்டிய மேலதிக அரச காடுகளின் பட்டியல் ஒன்று வனவளத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டதுடன், 2000 ஏக்கர் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் தொடர்பாக கமநலசேவை திணைக்களமும், வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து எல்லைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கையினை உடன் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெடிவைத்தகல்லு கிராமத்தின் காணிகள் இரண்டு வாரத்திற்குள் வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்படும். ஈச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடியேற்றம் செய்வதற்குரிய இடத்தினை விடுவிப்பதாகவும் வனவளத் திணைக்களத்தினர் உறுதியளித்தனர்.

குறித்த கலந்துரையாடலில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், செட்டிகுளம் பிரதேச செயலாளர் பாபயோன், கமநலசேவை உதவி ஆணையாளர் விஷ்ணுகாந்த், வனவளத் திணைக்கள மாவட்ட அதிகாரி மற்றும் வனவள உத்தியோகத்தர்கள், தென்னை பயிர்ச்செய்கை முகாமையாளர், பிரதேச செயலகங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி, உதயசூரியன் கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கஞ்சா போதைப்பொருளுடன் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் உதயசூரியன் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளம் பெண் ஒருவரே இவ்வாறு 50 கிராம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பெண் வியாபார நோக்கத்துடன் கஞ்சாவை வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கைதான பெண்ணை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஹிஷாலினிக்கு நீதி கோரி கல்முனையில் ஆர்ப்பாட்டம்





(பாறுக் ஷிஹான்)

ஹிஷாலினிக்கு நீதி கோரி கல்முனை நகரில் நேற்று (30) போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளுடன் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் ஏற்பாட்டில், மாதர் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன், இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாளராக அமர்த்தப்பட்டு, பின்னர் எரிகாயங்களுடன் உயிரிழந்த குறித்த பெண்ணிற்கு நீதி கோரி மேற்படி போராட்டம் நடத்தப்பட்டதாக கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் தலைவர் ந.சங்கீத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்த சிறுமிக்கான நீதியை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும். அநேகமான இடங்களில் பணத்திற்காக தரகர்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். எனவே, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற வீட்டார் மற்றும் வர்த்தகர்கள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். பெற்றோர்களிடம் 16 வயதிற்குட்பட்ட தமது பிள்ளைகளை வறுமையின் நிமித்தம் வேலைக்கு அனுப்புவதை நிறுத்துங்கள் என்று கோரிக்கை விடுக்கின்றேன். பெற்றோர்கள் தம் நிலையைக் கூறி உதவிகளை கிராமசேவகர், பிரதேச செயலாளர் மற்றும் தனவந்தர்களின் ஊடாக உதவிகளைப் பெற முடியும் என்றார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் நேற்று (30) இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக டயகம பொது மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹிஷாலினியின் மரணத்துக்கு நியாயம் கோரி மட்டக்களப்பில் த.ம.வி.பு. கட்சியின் மகளிர் அணி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்






(கனகராசா சரவணன்)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மகளிர் அணி மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஹிஷாலினியின் மரணத்துக்கு நியாயம் வேண்டி 'சிறுவர்களை சிதைக்காதீர்கள்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உள்ள வீதி சுற்றுவட்டத்தில் நேற்று (30) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அமைப்பு ஹிஷாலினியின் மரணத்துக்கு நியாயம் வேண்டி மட்டக்களப்பு நகர் கல்குடா, பட்டிருப்பு ஆகிய பிரதேசங்களில் நேற்று ஒரே நேரத்தில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உள்ள வீதி சுற்றுவட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் உட்பட பலர் ஒன்றிணைந்து ஹிஷாலினிக்கு நீதி வேண்டும், சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து, மக்கள் பிரதிநிதி சிறுமியை சீரழிப்பதா, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து, விசாரணையை துரிதப்படுத்து, வீட்டுவேலை செய்வோரை பதிவுசெய் போன்ற சுலோகங்களை ஏந்தியதுடன், கோஷங்கள் எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

# உடப்பு பகுதியில் தடைப்படும் மின்சாரம்

## அல்லலுறும் மக்கள்

(தகவல் : கணேஸ்)

புத்தளம் மாவட்டத்தின் ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்குட்பட்ட உடப்பு பிரதேசத்தில் கடந்த ஒரு வாரமாக மாலை ஏழு மணிக்கு மேல் அடிக்கடி தடைப்படும் மின்சாரப் பிரச்சினையால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்.


உடப்பு பிரதேசத்தில் கடந்த வாரம் நிலவிய காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து, உடப்பை அண்டிய பிரதேசங்களில் மாலை ஏழு மணியளவில் தடைப்பட ஆரம்பிக்கும் மின்சாரம் சில வினாடிகளில் மீண்டும் வழமைக்கு திரும்பினாலும் மீண்டும் அடுத்த சில நிமிடங்களில் மறுபடியும் மின்சாரம் தடைப்பட்டு, மீண்டும் வருகிற நிலைமை இரவு வரை தொடர்வதாலும், சில நேரங்களில் இரவு முழுக்க மின்சாரம் இல்லாமலும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகிறார்கள்.

குறிப்பாக இப்பகுதி மிகவும் உஷ்ணப் பிரதேசம் என்பதால் இரவு வேளைகளில் மின்விசிறி இல்லாமல் வீடுகளுக்குள் மக்கள் இருக்கமுடியாது. இந்நிலையில் மின்சாரம் இல்லாமையால் சிறு குழந்தைகள், வயதானவர்கள், கர்ப்பிணித் தாய்மார் எனப் பலரும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். அதிகாலை வேளையில் தொழிலுக்கு செல்லவேண்டிய மக்களும் இரவு வேளைகளில் உறக்கமின்றி தவிக்கும் நிலைமை காணப்படுகிறது.

மேலும், மின்சாரம் விட்டு விட்டுப் போய் வருவதால் வீடுகளிலுள்ள மின்சார சாதனங்கள் பழுதடைகிற நிலைமையும் காணப்படுகிறது. இந்த மின்வெட்டுப் பிரச்சினைக்கு பிரதான காரணம் இப்பிரதேசத்தில் மின்சார கட்டமைப்பு முறையாக இல்லை என்பதாகும். ஒரு சிறு காற்று, மழைக்குக் கூட மின்சாரம் தடைப்பட்டு விடும். மேலும், இப்பகுதியில் இறால் பண்ணைகள் இருப்பதால் இரவு வேளைகளில் கொக்கி போட்டு மின்சாரத்தை கள்ளத்தனமாக இறால் பண்ணைகளுக்கு எடுப்பதாலும் இந்த மின்சாரத் தடை பிரச்சினை தொடர்கிறது.

எனவே, உரிய அதிகாரிகள் மேற்படி பிரச்சினையை கருத்திற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து, சீரான மின்சாரத்தை மக்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பிரதேச மக்கள் இலங்கை மின்சார சபையிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண திணைக்களத்தினால் கொண்டாடப்பட்ட விளையாட்டு தினம்







(கந்தளாய் நிருபர்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நேற்று (30) விளையாட்டு தினம் கொண்டாடப்பட்டது. இன்று (31) கொண்டாடப்படவுள்ள நாட்டின் விளையாட்டு தினத்தினை முன்னிட்டு, இன்றைய தினம் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் எதிரில் விளையாட்டு உடற்பயிற்சிகள் இடம்பெற்றன.

தேசியக்கொடிகள் ஏற்றப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. விளையாட்டு தினம் தொடர்பிலும், போசணைக் கூறுகளின் அவசியம் குறித்தும், உடற்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பிலும் கருத்துரைகள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியாக அலுவலர்கள் உடற்பயிற்சிகளில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொண்டார்கள். இலங்கைக்கு முதலாவது ஒலிம்பிக் பதக்கம் கிடைத்த வரலாற்று சிறப்புமிக்க நாள் இன்றாகும். 1948 ஆம் ஆண்டு, (31-07-1948) ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்துகொண்டு, மேஜர் தேசமான்ய டங்கன் வைட் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். தடகளப் போட்டிகளில் ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற முதலாவது இலங்கையர் மற்றும் தெற்காசியவர் இவரேயாவார்.

இலங்கை விளையாட்டு வீரரும், படை வீரருமான இவர் பிற்காலத்தில் லண்டனில் நிரந்தரமாக குடியேறியதோடு, 1998 ஆம் ஆண்டு காலமானார். இவருக்கு அடுத்ததாக, இலங்கையைச் சேர்ந்த சுசந்திகா ஜயசிங்க, 2000ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்தில் கொரோனா பரவல் திடீர் அதிகரிப்பு; 24 மணிநேரத்தில் 290 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

## அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பணிப்பாளர் தௌபீக் எச்சரிக்கை

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. இதன் காரணமாக மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய கொரோனா நிலவரம் குறித்து, நேற்று முன்தினம் (29) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 24 மணிநேரத்தில் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுடன் 290 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவில் 30 பேரும், திருகோணமலை பிராந்திய சுகாதாரப் பிரிவு 40 பேரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பிரிவில் 119 பேரும், அம்பாறை பிராந்திய சுகாதாரப் பிரிவில் 101 பேரும் அடங்குகின்றனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சிறு வீழ்ச்சியை சாதாரணமாக எடுத்துக் கொண்டு, பொதுமக்கள் தங்களது பாதுகாப்பில் கவனயீனமாக இருந்ததால் இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கலாம் என பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில், மேல் மாகாணத்தில் சில இடங்களில் திரிபடைந்த டெல்ட்டா ஆதிக்கம் செலுத்தி வருவதால் அது கிழக்கு மாகாணத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தடுப்பூசி நிலைவரம் தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கொரோனாவின் தாக்கத்தையும் பரவல் வேகத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியை எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் சகல பகுதிகளிலும் தடுப்பூசி வழங்கும் ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை பிராந்திய சுகாதாரப் பிரிவுக்கு இதுவரை 1,35,000 தடுப்பூசிகளும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பிரிவுக்கு 2,75,000 தடுப்பூசிகளும், திருகோணமலை பிராந்திய சுகாதாரப் பிரிவுக்கு 1,75,000 தடுப்பூசிகளும், கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவுக்கு 1,90,000 தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறை பிராந்திய சுகாதாரப் பிரிவில் இதுவரை 1,10,000 பேருக்கு முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இங்கு 24,949 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பிரிவில் இதுவரை 1,74,935 பேருக்கு முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இங்கு 100,065 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார பிரிவில் இதுவரை 1,50,186 முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இங்கு 24,814 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கல்முனை பிராந்திய சுகாதார பிரிவில் நேற்று முன்தினம் (29) மாத்திரம் 42,846 பேருக்கு தடுப்பு ஊசி செலுத்தப்பட்டு இருக்கின்றது. மொத்தமாக இங்கு 92,846 பேருக்கு முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.



கல்முனையை பொறுத்தவரையில், கடைசியாக தடுப்பூசிகள் இங்கு கிடைக்கப்பெற்றாலும், தடுப்பூசி வழங்கப்பட எதிர்பார்ப்போரில் 40 வீதமானோருக்கு இந்த பிராந்தியத்தில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

# ஜெயசிறிலின் தவிசாளர் கதிரை பறக்கும்

## எச்சரிக்கை விடுத்தது முஸ்லிம் காங்கிரஸ்



(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிங்களின் மீது வன்மத்தை கக்கி உலக முஸ்லிங்களின் தலைவராக இருக்கும் முஹம்மது நபியின் வாழ்க்கையையும், இஸ்லாமிய வரலாற்றையும் தவறாக திரிவுபடுத்தி நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியதன் மூலம் இலங்கை மக்களின் கோபத்தையும் தாண்டி உலகில் வாழும் 180 கோடி இஸ்லாமியர்களினதும் எதிர்ப்பை சம்பாதித்தவராக காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மாறியுள்ளார் என காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தனர்.

காரைதீவு பிரதேச சபை பிரதித்தவிசாளர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையிலான காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எச்.எம். இஸ்மாயில் (ஸ்ரீ.ல.மு.கா), ஏ.ஆர்.எம். பஸ்மீர் (சுயேச்சை), எம். ஜலீல் (அ.இ.ம.கா.), எம்.என்.என். றணீஸ் (ஸ்ரீ.ல.மு.கா) ஆகியோர் சம்மாந்துறை பொலிஸில் இன்று மாலை காரைதீவு தவிசாருக்கு எதிராக முறைப்பாடொன்றை பதிவுசெய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

பண்புள்ள, நாகரிகமான, அறிவாற்றல் உள்ள காரைதீவு மண்ணில் இப்படியான இனவாத சிந்தனை உள்ள தவிசாளர் இருப்பது வெட்கக்கேடான ஒன்றாகும். இவரை தவிசாளர் கதிரையில் இருந்து இறக்கி சிந்தனை ஆற்றல் உள்ள இன்னும் ஒரு தமிழ் சகோதரரை இந்த கதிரைக்கு அமர்த்துவதே எங்களின் பணியாகும் என்றும். தொடர்ந்தும் அபிவிருத்திகளையும் சமூகம் சார்ந்த விடயங்களையும் இனவாத கண்கொண்டு பார்த்துவரும் இவருக்கு தகுந்த பாடம் கற்பிக்கும் நேரம் வந்துள்ளது.

முஸ்லிம்களுடன் காலா காலமாக ஒற்றுமையாக இருப்பதுடன், சகோதரத்துவத்தை பேணி நடக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிரேஷ்ட தலைமைகள் இப்படியான நச்சு விதைகளை கட்சியை விட்டு நீக்கி சகோதரத்துவத்தை உறுத்திப்படுத்த முன்வர வேண்டும். இப்படியான இனவாத சிந்தனை கொண்டவர்களினால் மிகப்பெரும் இனக்கலவரம் உருவாக வாய்ப்புள்ளது. இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாரிடம் முறைப்பாட்டை வழங்கியுள்ளோம். இவர் விரைவில் கைதாவார் எனும் நம்பிக்கை இருக்கிறது என்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மண்டூர் கந்தசுவாமி ஆலய திருவிழா நடத்த அனுமதி

(வீரமுனை நிருபர்)

தற்போது நாட்டில் நிலவும் பாரிய கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக மிகவும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மண்டூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி தெரிவித்தார்.

மண்டூர் முருகன் ஆலய திருவிழாக்கால நடைமுறைகள் தொடர்பான கூட்டம், செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் பூஜை ஆராதனைகளுடன், ஆலய வளாகத் தீர்த்த கிணறுகளில் தீர்த்தோற்சவத்துக்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

தேசத்துக் கோயிலென போற்றப்படும் மண்டூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா எதிர்வரும் 02ஆம் திகதி இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறவுள்ளது.

இந்நிலையில், இறுக்கமான சுகாதார விதிமுறைகளை பின்பற்றி பூஜைத்திருவிழா மற்றும் நிர்வாகத்துடன் தொடர்புடைய 50 பேரின் பங்குபற்றுதலுடன் மாத்திரம் உற்சவம் நடத்த சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

திருவிழாக்காலங்களில் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள் குறைந்தது ஒரு மீற்றர் தூர சமூக இடைவெளியை பின்பற்றுவதுடன், காவடி எடுத்தல், அலகு குத்தல், அங்கப்பிரதட்சணை செய்தல் என்பவற்றுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றார்.





பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக, மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிமனையில், வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா தலைமையில் தேசிய விளையாட்டு தினத்தைப் பிரகடனம் செய்யும் நிகழ்வினைப் படங்களில் காணலாம். (ஏறாவூர் நிருபர் - நாஸர்)

# இராணுவ கட்டளைத் தளபதி – சிப்பாய்க்கு கொலைக் குற்றச்சாட்டில் மரணதண்டனை

(அப்துல்சலாம் யாசீம்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்டன் குணசேகரம் என்பவருக்கு மரணத்தை விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவ கட்டளை தளபதி மற்றும் சிப்பாய்க்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இத்தண்டனையை வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் வசித்த ஞானசிங்கம் அன்டன் குணசேகரம் என்பவருக்கு 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி மரணம் விளைவித்ததாக அச்சுவேலி 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் நகர 512 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் அவரது சிப்பாய் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் எதிரிகளின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இருந்து திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் ஞானசிங்கம் அன்டன் குணசேகரம் என்பவருக்கு மரணத்தை விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் 2007 ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 27ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் தண்டனை சட்டக்கோவை 296 பிரிவின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதேநேரம் அதுதொடர்பான விசாரணைகள் முடிவுற்று குறித்த வழக்கின் எதிரிகளுக்கு 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனினால் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதன்போது முதலாம் எதிரியான யாழ்ப்பாணம் - அச்சுவேலி 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி டி.ஆர்.பர்தலம்யூஸ் என்பவர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் குற்றத்தை நிரூபிக்க தவறியதால் முதலாவது எதிரியின் வழக்கு விசாரணை முடிவில் விடுவித்து விடுதலை செய்யப்பட்டார்.

மேலும், இரண்டாம், மூன்றாம் எதிரிகளுக்கான குற்றச்சாட்டுகள் அரச சட்டவாதியினால் நிரூபிக்கப்பட்டதால், இரண்டாம், மூன்றாம் எதிரிகளுக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

எனினும், குறித்த தீர்ப்புக்கு எதிராக இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிரிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி மேன்முறையீட்டு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்று கொண்டிருந்த வேளையில், இரண்டாம், மூன்றாம் எதிரிகளின் சட்டத்தரணியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த வழக்கு வாபஸ் பெறப்பட்டு அதனைத் தொடர்ந்து தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில், 2018ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 8ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் வழங்கிய மரண தண்டனை தீர்ப்பு உறுதிசெய்யப்படுவதோடு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிரிக்கு தெரிவிக்கும் பொருட்டு எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் குறித்த இரண்டு எதிரிகளுக்கும் வாசித்து காட்டப்படவுள்ளது. திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் வழங்கிய தீர்ப்பு சரியானது என கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் உறுதிசெய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் நான்கு பகுதிகள் சிவப்பு வலயங்களாக அடையாளம்

## - மட்டு. பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மயூரன்

(அட்டாளைச்சேனை)

மட்டக்களப்பு பிராந்தியத்தில் மட்டக்களப்பு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பகுதிகள், தொடர்ந்து சிவப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

மட்டக்களப்பில் இதுவரை இரண்டு இலட்சத்து 78 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் இரண்டு இலட்சத்து ஆறாயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 24 மணிநேரத்தில் மட்டக்களப்பில் 58 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி மட்டக்களப்பில் இதுவரை 8,525 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப் பட்டுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர்களுக்கு சுய உரிமையோடு கூடிய அபிவிருத்தியே வேண்டும்; கண்களை விற்று அவர்கள் ஓவியம் வாங்க விரும்பவில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் சுட்டிக்காட்டு

(வீரமுனை நிருபர்)

போராட்டத்தை காட்டிக்கொடுத்து தமிழ் இனத்தை அழித்து பலவீனப்படுத்திய கூட்டணிகள் பொய் வாக்குறுதிகளையும், பிரசாரங்களையும் மேற்கொண்டு தமிழ்த் தேசியத்தை காலால் மிதித்து நசுக்கி விடலாம் என்ற முயற்சியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காலடி பதித்துள்ளனர் என கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

ஆளும்கட்சியில் இணைந்து செயற்படுகின்ற தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட சக்தியை அழித்தது போன்று தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு பேரின ஆசிகள் மற்றும் பண முதலீடுகளுடன் மிகவும் அசிங்க அரசியலை முன்னெடுக்கிறார்கள். இவ்வாறானவர்களை பொறுமையாக ஜனநாயக அகிம்சை ரீதியில் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

பேரினவாத அபகரிப்பின் கீழுள்ள திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டத்தினை மீட்க வேண்டும். அதனை விடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் போட்டியிட்டு ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்று, கிழக்கை மீட்பது எவ்வாறு என்று மக்கள் மத்தியில் கேள்வி நிலவுகிறது. கிழக்கிலிருந்து, அம்பாறை, திருகோணமலையை கைவிட்டு விட்டார்களோ என்று எண்ணவும் தோன்றுகிறது. பேரினவாதம் அடித்தாலும், உதைத்தாலும் கூட்டமைப்புக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுக்கு தேவையெல்லாம் அலங்கார பதவியே தவிர வேறொன்றுமில்லை.

ஏட்டிக்குப் போட்டி இழுக்கின்ற அரசியல் முதிர்ச்சி பக்குவ ஞானமில்லாது, தேசிய உணர்ச்சியை பேரினவாதிகளிடம் அடமானம் வைத்த அரசியலாளர் தமிழ்க் கூட்டமும் வடக்கு - கிழக்கில் செயற்படுகிறது. ஏட்டிக்குப் போட்டியாக அடிதடி, வெட்டுக்குத்து அரசியலைத் தவிர்த்து நியாய நிதான அரசியல் முன்னெடுப்புகளை கூட்டமைப்பு மேற்கொள்கிறது.



எனவே, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் சுய மரியாதை உரிமையோடு கூடிய அபிவிருத்தியை விரும்புகிறார்களே ஒழிய, கண்களை விற்று ஓவியம் வாங்கவோ அத்திவாரத்தை இடித்து கட்டடம் கட்டவோ, மரத்தின் ஆணிவேரை அறுத்து அரசியல் செய்யவோ விரும்பவில்லை.

ஆகவே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாகரிக ஜனநாயக அரசியலை முன்னெடுப்பதால் தன்மானத் தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கமாக நின்று செயற்பட வேண்டும் என்றார்.

# தெறிக்கும் தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவின் முக்கிய நகரங்களில் திரும்பும் பக்கமெல்லாம் கலவரக் காட்சிகளும், அம்பியூலன்ஸின் அலறல் சத்தங்களும்தான் நிறைந்திருப்பதாக சொல்லப்படுகிறது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய கலவரங்கள் தென்னாபிரிக்க மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. கலவரத்திலும், அதனால் ஏற்பட்ட நெரிசலிலும் ஏராளமானவர்கள் காயமடைந்திருக்கின்றனர். 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர்.

அமைதி, அகிம்சைக்குப் பெயர்போன நெல்சன் மண்டேலாவின் சொந்த ஊரான சொவெட்டோவில்கூட மிகப்பெரிய கலவரம் அரங்கேறியிருக்கிறது. முக்கிய நகரங்களில் நடைபெற்றுவரும் கலவரத்தை அடக்கும் நோக்கில் தென்னாபிரிக்க இராணுவம் களமிறக்கப்பட்டிருக்கிறது. கலவரத்தில் ஈடுபட்ட 3,000இற்கும் அதிகமானோரை கைதுசெய்திருக்கிறது தென்னாபிரிக்க காவல்துறை.



ஜேக்கப் ஜூமா

**முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் குடியேறிய இந்திய வம்சாவளியினருக்கு இந்தப் போராட்டத்தால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக அங்கிருக்கும் இந்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஜூமா மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும், இந்திய வம்சாவளித் தொழிலதிபர்களான குப்தா சகோதரர்களுக்கும் சம்பந்தமிருக்கிறது.**

## கலவரத்துக்குக் காரணம் என்ன?

2009ஆம் ஆண்டுமுதல் 2018ஆம் ஆண்டுவரை தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் ஜேக்கப் ஜூமா. இவர் கடந்த வாரத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தென்னாபிரிக்காவிலுள்ள குவாஜுலு நடால் (KwaZulu-Natal) மாகாணத்தில் பிறந்த ஜூமா, ஜுலு (Zulu) இனத்தைச் சேர்ந்தவர். ஜுலு இனத்தைச் சேர்ந்தவர்கள் இனவெறியால் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற வாதத்தை முன்வைத்தவர் ஜூமா. ஜனாதிபதி பதவிக்கு வந்தபின்னர், அவர் வாழ்ந்த பகுதியைச் சுற்றி பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். இதனால் ஜூமாவுக்கு நடால் மாகாணத்தில் ஆதரவாளர்கள் அதிகம். குறிப்பாக, அங்கிருக்கும் இளைஞர்கள் ஜூமாவின் பக்கம் நிற்கின்றனர். ஜூமாவை விடுதலைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையோடு வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினர் அவரது ஆதரவாளர்கள். ஜூமாவின் சொந்த மாகாணமான குவாஜுலு நடாலில்தான் முதலில் போராட்டம் தொடங்கியது. அந்தப் போராட்டங்கள் தற்போது கலவரங்களாக மாறியிருக்கின்றன. தென்னாபிரிக்காவிலுள்ள வணிக வளாகங்கள், கடைகளிலுள்ள ரி.வி., பிரிட்ஜ், ஏசி, உணவுப்பொருட்கள் உள்ளிட்ட பொருட்களைச் சூறையாடிச் செல்கின்றனர் கலவரக்காரர்கள். கடைகளை முழுவதுமாகச் சூறையாடிய பின்னர் அந்தக் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் விடுகின்றனர். ஏரிஎம் மையங்கள், உணவகங்கள் உள்ளிட்டவற்றை அடித்து நொறுக்கி வருகின்றனர்.

வணிக வளாகங்களுக்குத் தீ வைக்கப்படும் காரணத்தால், அந்த வளாகங்களுக்கு மேல்தளத்தில் வசிக்கும் மக்கள், அங்கிருந்து தப்பியோடி உயிரைக் காத்துக்கொள்கின்றனர். அப்படித் தப்பி ஓடும்போது ஏற்படும் கூட்ட நெரிசலில் பலரும் உயிரிழந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுவரை தென்னாபிரிக்காவில் பல நூறு கோடி ரூபா மதிப்பிலான பொருட்சேதம் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இதேநிலை தொடர்ந்தால், கடுமையான பொருளாதார நெருக்கடியும், உணவுப் பஞ்சமும் தலைவிரித்தாடும் என்று எச்சரித்திருக்கிறார்கள் அங்குள்ள அமைச்சர்கள்.





## ஜூமா கைதுக்கு என்ன காரணம்?

இவ்வளவு வன்முறைக்கும் ஜூமா கைதுசெய்யப்பட்டதுதான் காரணம் என்றால், ஜூமா கைதுசெய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்ற கேள்வியும் சேர்ந்தே எழுகிறது. அந்தக் கேள்விக்கு விடையாக ஒருசில விடயங்கள் சொல்லப்படுகின்றன.

ஜூமா தனது ஆட்சிக்காலத்தில் 1,000 கோடி ரூபா வரை ஊழல் செய்திருப்பதாகக் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. இதன் காரணமாகத்தான் தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்திருக்கிறார் ஜூமா.

தொடர்ந்து இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் பலமுறை நேரில் ஆஜராகச் சொல்லியும், நீதிமன்றம் பக்கமே தலைகாட்டவில்லை ஜூமா. இதனால், நீதிமன்ற அவமதிப்பு என்று சொல்லி, அவருக்கு 15 மாதகால சிறைத்தண்டனை வழங்கியது தென்னாபிரிக்க நீதிமன்றம்.

## திசைமாறிய போராட்டம்

முதலில் ஜூமா விடுதலையை முன்னிட்டு தொடங்கப்பட்ட இந்தப் போராட்டம், தற்போது வேறு திசை நோக்கி மாறியிருக்கிறது. தென்னாபிரிக்காவில் கொரோனா பெருந்தொற்றுக்கு முன்பாகவே வேலைவாய்ப்பின்மை, வறுமை உள்ளிட்ட பிரச்சினைகள் இருந்துவந்தன. கொரோனாவுக்குப் பின்னர், இந்தப் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்தன. தென்னாபிரிக்க மக்கள்தொகையில் 46 சதவிகிதம் பேர் வேலைவாய்ப்பின்மையை எதிர்கொண்டிருக்கின்றனர். இந்த 46 சதவிகிதம் பேரில் 74.7 சதவிகிதத்தினர் இளைஞர்கள்.

கொரோனா பெருந்தொற்றையொட்டி, வேலையில்லாதவர்களுக்கு மாதந்தோறும் 350 rand (இலங்கை மதிப்பில் 4,500 ரூபா வழங்க வந்தது தென்னாபிரிக்க அரசு. இந்த நிவாரணத் தொகையை நம்பித்தான் பல தென்னாபிரிக்கக் குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிவாரணத் தொகை கொடுப்பதை நிறுத்தியது அரசு. இதனால் பல குடும்பங்கள் உணவில்லாமல் தவித்ததாக சொல்லப்படுகிறது.

எனவே, முதலில் ஜூமா கைதுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட போராட்டங்கள், தற்போது கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்டிருக்கும் வறுமை, வேலைவாய்ப்பின்மையால் கலவரமாக மாறியிருக்கின்றன என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள். அதனால்தான் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொருள்களைச் சூறையாடிச் சென்றனர் என்றும் தகவல்கள் சொல்லப்படுகின்றன.

## இந்தியர்களுக்கு பாதிப்பு?

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் குடியேறிய இந்திய வம்சாவளியினருக்கு இந்தப் போராட்டத்தால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக அங்கிருக்கும் இந்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஜூமா மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும், இந்திய வம்சாவளித் தொழிலதிபர்களான குப்தா சகோதரர்களுக்கும் சம்பந்தமிருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் இந்தியர்களுக்கு எதிராக தென்னாபிரிக்க மக்கள் நிற்பதாகவும், இந்தியர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதாகவும் சொல்லப்படுகிறது.



இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களின் குடியுரிமையும், சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டதைபோல் தென்னாபிரிக்காவிலிருந்தும் இந்தியர்கள் வெளியேற்றப்படக்கூடும் என்று கவலை தெரிவிக்கிறார்கள் தென்னாபிரிக்க வாழ் இந்தியர்கள்.

இந்தியர்கள் தாக்கப்படுவதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. தென்னாபிரிக்காவிலுள்ள முக்கிய நிறுவனங்களில், அதுவும் நிதி சார்ந்த நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளை வகிப்பது இந்தியர்கள்தாம். அவர்களால்தான் நமக்கு போதிய வேலைவாய்ப்புகளும், பணமும் கிடைப்பதில்லை என்று தென்னாபிரிக்கர்கள் சிலர் கருதுவதாக சொல்லப்படுகிறது.

அதேநேரத்தில், தென்னாபிரிக்காவின் வளர்ச்சியில் முக்கிய ங்கு இந்தியர்களையே சாரும். பொருளாதார ரீதியாகத் தென்னாபிரிக்க நாடு வளர்ந்ததற்கு முக்கிய காரணமாக இருக்கும் இந்தியர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற நினைப்பது சரியல்ல என்று இந்தியர்களுக்கு ஆதரவாகவும் தென்னாபிரிக்க மக்கள் சிலர் துணை நிற்கின்றனர்.



சிரில்

## கலவரத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்திருக்கிறது தென்னாபிரிக்க அரசு?

2018இல் ஜூமாவைத் தொடர்ந்து சிரில் ராமபோசா ஜனாதிபதி பதவிக்கு வந்தார். அவர் ஆட்சிக்கு வந்தபின்னர் நடக்கும் மிகப்பெரிய சட்டம், ஒழுங்கு பிரச்சினை இது. ராமபோசா எந்தவொரு முடிவையும் சரியாக எடுப்பதில்லை என்கிற விமர்சனம் அவர்மீது இருக்கிறது. கொரோனா ஊரடங்கு அறிவித்தபோது, அதை அமுல்படுத்துவதற்காக 70,000 இராணுவ வீரர்களைக் களமிறக்கினார் ராமபோசா. ஆனால், இப்போது வெடித்திருக்கும் மிகப்பெரிய கலவரத்தைக் கட்டுப்படுத்த வெறும் 2,500 வீரர்களை, அதுவும் தாமதமாகத்தான் களமிறக்கியிருக்கிறார் என்கிற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

மேலும், இராணுவ வீரர்களும், காவல்துறையினரும் துப்பாக்கிகளைக் கையில் வைத்துக்கொண்டு வேடிக்கைதான் பார்க்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டும் வைக்கப்படுகிறது. ஜேக்கப் ஜூமா, சிரில் ராமபோசா இருவருமே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். கலவரம் செய்பவர்கள்மீது ராமபோசா எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதற்குக் காரணம் கட்சிப் பாசம்தானா? என்பது போன்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுவருகின்றன.

## தீர்வு என்ன?

ஜூமாவை விடுதலை செய்வதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்று சொல்லப்படுகிறது. வறுமை, வேலைவாய்ப்பின்மை ஆகிய பிரச்சினைகளிலும் உடனடித் தீர்வுகள் காண்பது கடினம். எனவே, இந்த விவகாரத்தில், சர்வதேச நாடுகள் தலையிட்டு அங்கு நடக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண உதவிசெய்ய வேண்டும் என்பதே அரசியல் நோக்கர்களின் பதிலாக இருக்கிறது.

சர்வதேச நாடுகள் தலையிட்டு தென்னாபிரிக்காவில் அமைதி நிலவ உதவிசெய்ய வேண்டும் என்பதும்தான் நம் அனைவரின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

**நன்றி - விகடன்**

# அச்சம் தரும் காலநிலை மாற்றம்: அழியப்போகிறதா உலகம்?



உலகம் அழிந்தால் எப்படியிருக்கும் எனும் கதைக்களத்தை அடிப்படையாகக் கொண்டு, ‘2012’ எனும் பெயர் கொண்ட திரைப்படம் கடந்த 2009ஆம் ஆண்டு வெளிவந்தது. அன்றைக்கு உலக அழிவு குறித்த பல கருத்துகளுக்கு தெளிவான விளக்கங்கள் வெளிவந்தாலும், அதனைத் தொடர்ந்து உலக அழிவு குறித்த பார்வைகள் ஒரு விவாதத்தைத் தொடங்கி வைத்தன.

இத்தகைய உலக அழிவு குறித்த பேசுபொருள் ஒருபக்கம் அச்சம் தருவதாக இருந்தாலும், உலகம் முழுவதும் நடந்து வரும் இயற்கைப் பேரிடர்கள் மீதான பார்வைக்கு முக்கியத்துவம் தருகின்றது.

அளவுக்கதிகமாக நுகரப்பட்டு வரும் இயற்கை வளங்கள் காலநிலை மாற்றம் எனும் பெரும் சிக்கலுக்கு வழியமைக்கும் பாதைகளாக மாறிப்போயுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக அதிகம் உச்சரிக்கப்பட்டு வரும் காலநிலை மாற்றம் எனும் சொற்றொடர் மிக... மிக... மிக... அவசரமாக கவனிக்கப்பட வேண்டியதாக கண்முன் நிற்கிறது.

### ஏன்?

உலகம் முழுவதும் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் இயற்கைப் பேரிடர்கள் சூழலியல் ஆர்வலர்களை கதிகலங்கச் செய்துள்ளன. காலநிலை மாற்ற அவசரத்தின் எச்சரிக்கை மணியின் கடைசி ஒலியைக் கண்டுகொள்ளாத அரசுகளால் மனித சமூகம் சந்திக்கவுள்ள பேராபத்துகள் அரங்கேறி வருகின்றன.

கடந்த ஜூலை 17ஆம் திகதி ஜேர்மனியின் மேற்குப் பகுதி வரலாறு காணாத மழைப்பொழிவை சந்தித்தது. இதனால் இதுவரை 200 பேருக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். 750இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 150இற்கும் மேற்பட்டவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதீத மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் மேற்கு ஜேர்மனியில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால், மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயரச் செய்யப்பட்டுள்ளனர்.

இரு மாதங்களில் பெய்ய வேண்டிய மழை அளவானது, இரண்டே நாட்களில் கொட்டித் தீர்த்தமை, யாரும் எதிர்பார்த்திராத பேரிடர் தான் என்றாலும், இது மீள முடியாத சிக்கலை ஜேர்மனிக்குத் தந்துள்ளது.

ஜேர்மனி எனும் ஒரு நாட்டிற்கு மட்டுமான பிரச்சினை, எப்படி உலகளாவிய எச்சரிக்கையாக மாறும் என நாம் கேள்வி எழுப்பலாம். ஆனால், அந்தக் கேள்விக்கான பதில் நீளமானது. ஜேர்மனி தவிர்த்து பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளும் வெள்ள பாதிப்பை சந்தித்துள்ளன. அதேபோல் சீனாவில் பெய்த மழைப்பொழிவால் ஏற்பட்ட வெள்ளம், அந்நாட்டை காலநிலை மாற்ற பாதிப்பின் பக்கம் திருப்பியுள்ளது.

பெல்ஜிய நகரமான பெபின்ஸ்டரில் நேற்று வரையிருந்த வீடுகள் இன்று இடிபாடுகளாகக் காட்சி தருகின்றன. மோசமான வானிலை காரணமாக பெல்ஜியத்தின் தெற்குப் பகுதியில் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பிரஸ்சல்ஸ் மற்றும் ஆண்ட்வெர்பிற்குப் பிறகு பெல்ஜியத்தின் மூன்றாவது பெரிய நகரமாக அறியப்படும் லீஜினிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அந்நகர மேயர் வலியுறுத்தியுள்ளார்.

வீடுகளை விட்டு வெளியேற முடியாதவர்கள், தங்கள் குடியிருப்புக் கட்டடங்களின் மேல் தளங்களுக்குச் செல்லவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். வாசன்பெர்க் அணை உடைந்ததால் அப்பகுதியில் வசிக்கும் சுமார் 700 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில், வெள்ளப்பெருக்கில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 168ஆக உயர்ந்துள்ளது. ஜேர்மனியில் 141 பேரும், பெல்ஜியத்தில் 27 பேரும் இறந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்தும் இதேபோன்ற பாதிப்புகளை சந்தித்துள்ளது. ஐரோப்பாவில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதுவரை 100இற்கும் அதிகமானோர் மாயமாகியுள்ளனர். ஐரோப்பாவில் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் காலநிலை மாற்றத்தால், இதுபோன்ற அதீத கனமழை, அதன் காரணமாக ஏற்படும் பெருவெள்ளம் போன்றவை குறித்த எச்சரிக்கைகளை காலநிலை ஆராய்ச்சியாளர்கள் எழுப்பி வருகின்றனர். இந்நிலையில் பருவநிலை மாற்றமே இதற்குக் காரணம் என ஜேர்மனியின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் வெஞ்சா சுல்சே தெரிவித்துள்ளமை மிக முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

இவற்றுக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்புப் பயணத்தில் இருந்த ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் தெரிவித்த கருத்து இனி உலகம் முழுவதுமுள்ள தலைவர்கள் பேசவுள்ள கருத்து என்பதை நீங்கள் குறித்து வைத்துக் கொள்ளலாம்.

“இந்தப் பேரழிவு மிகுந்த அதிர்ச்சியைத் தந்துள்ளது. காலநிலை மாற்றத்தைத் தடுக்க நாம் செய்தவை போதுமானவையல்ல. புவி வெப்பநிலை 2 டிகிரிக்கும் கீழ் இருக்க நாம் உடனடியாகப் பணியாற்ற வேண்டும். குறைந்தபட்சம் 1.5 டிகிரி அளவை நாம் இலக்காக வைத்து செயற்படுவது தீவிரமாக்கப்பட வேண்டும். தற்போதைய நமது நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

மெர்கலின் இந்தக் கருத்து சாதாரணமாகக் கடக்கக்கூடியது அல்ல. செப்டெம்பரில் நடக்கவுள்ள ஜேர்மன் ஜனாதிபதித் தேர்தலில் இக்கருத்து எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தல் வாக்குறுதியாக காலநிலை மாற்ற நடவடிக்கைகள் பேசப்படுவது நல்ல தொடக்கம். எனினும், அவை வழக்கமான கண்துடைப்பு நாடகங்களாக மாறாமல் இருக்க வேண்டும்.

எதிர்வரும் காலத்தில் ஒவ்வொரு நாடும் தங்களது காலநிலை மாற்ற இலக்கை தேர்தலின் முக்கிய வாக்குறுதியாக முன்வைக்கும் அளவிற்கு இதன் சிக்கல் தீவிரமடைந்துள்ளது. தற்போது உடனடி மீட்பு நடவடிக்கைக்காக ஜேர்மன் அரசு சுமார் 40 கோடி யூரோக்களை (470 மில்லியன் டாலர்) ஒதுக்கீடு செய்துள்ளது.

காலநிலை மாற்ற சிக்கல்கள், வெள்ளங்களால் மட்டும் அளவிடப்படுகிறதா என நம்மால் கூற முடியாது. அவை நிலப்பகுதிகளின் வானிலை நிலைகளுக்கேற்ப செயலாற்றுகின்றன. வெள்ள பாதிப்புகளை வாசித்து தத்தளித்துக் கொண்டிருக்கும் நமக்கு சுட்டெரிக்கும் செய்திகளை அமெரிக்காவும், ரஷ்யாவும் தருகின்றன.

கடந்த வருடம் காட்டுத்தீயால் அவுஸ்திரேலியா சந்தித்த சிக்கலை நாம் மறந்திருக்க மாட்டோம். அதன் சுவடு மறைவதற்குள் அமெரிக்காவின் ஓரேகான் மாகாணம் அதனினும் அதிக பாதிப்பை சந்தித்துவிட்டது. அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் இதுவரை இல்லாதளவில் வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், ஓரேகான் மாகாணத்தில் மட்டும் வெயில் பாதிப்புக்கு இதுவரை 95 பேர் உயிரிழந்திருப்பது தெரியவந்துள்ளது.

போர்ட்லாண்டில் 116 டிகிரி, சியாட்டிலில் 108 டிகிரி அளவிலும் ஐடஹோ மாகாணம் மற்றும் மான்டானா மாகாணத்தின் கிழக்குப் பகுதிகளில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் வெயில் பதிவானதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஓரேகான் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ குடியிருப்புகளை எரித்து நாசம் செய்துள்ளது. வெயிலைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் பச்சை மரங்கள் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. அதீத கரும்புகையால் அப்பகுதியில் விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு சைபீரியாவில் ஏற்கெனவே பெருமளவான நிலப்பரப்பு காட்டுத்தீயால் அழிந்துள்ள நிலையில், ரஷ்யாவின் யாகுடியா பகுதியில் கரும்புகை மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது கடந்த 150 ஆண்டுகளில் இல்லாத அளவு வறண்ட வானிலையை அப்பகுதியில் உண்டாக்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான காட்டுத்தீ நிகழ்வுகள் ரஷ்யாவின் பல பகுதிகளில் ஏற்பட்டு வந்தாலும், தற்போதைய நிலையில் அவை முக்கிய கவனம் பெற்றுள்ளன.

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் கடந்த வாரம் பெய்த அதீத கனமழையால் தலைநகர் ஜெங்ஜோ கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது, கடந்த 1,000 ஆண்டுகளிலேயே மிக அதிகபட்ச மழை அளவாகும். இப்பகுதியில் மூன்றே நாட்களில் மட்டும் 640 மி.மீ. மழை பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரில் அதிகரித்துவரும் வெள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதுவரை 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. நகரின்



பிரதான போக்குவரத்து சேவைகளான மெட்ரோ ரயில்களில் வெள்ளநீர் புகுந்துள்ளது.

வழக்கமான மழை அளவைக் காட்டிலும் 5 செ.மீ. முதல் 25 செ.மீ. வரை அதிக மழை பெய்துள்ளதாக வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மழை-வெள்ளம் காரணமாக 1,000 கோடி டொலர் (சுமார் ரூ.75,000 கோடி) பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தால் நகரின் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்த பயணிகள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். ரயில் பெட்டிகளுக்குள் மார்பளவு தண்ணீரில் தத்தளித்த அவர்கள் பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டனர். எனினும், இதில் 12 பேர் உயிரிழந்தமை சோகமானது.



சரி, இவை உலகின் எதோ ஒரு மூலையில் நடக்கும் வழக்கமான வானிலை பேரிடர்கள்தான் என நாம் கருதினால், கடந்த காலங்களில் இந்தியா சந்தித்த பேரிடர் குறித்த புள்ளிவிபரங்கள் நமக்கு சற்றே அச்சம் தரலாம்.

தற்போதைய தென்மேற்கு பருவகாலத்தில் தெலுங்கானா, உத்தரகாண்ட், கர்நாடகம், கோவா மற்றும் மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை காரணமாக வெள்ளத்தை சந்தித்துள்ளன.

மழை என்றால் வெள்ளம் கட்டாயம் எனும் காலத்தை நோக்கி செய்திகள் நகர்ந்து வருகின்றன. மகாராஷ்டிரத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 207 பேர் பலியாகியுள்ளனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். ராய்காட் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 53 பேர் பலியாகியுள்ளனர் என்பது அம்மாநிலத்தின் தற்போதைய பேசுபொருள்.

### இவை ஏன் கவனிக்கப்பட வேண்டும்?

கடந்த சில வருடங்களாக வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் உருவாகும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக உருமாறுவது அதிகரித்து வருகிறது. இந்தியாவில் கடந்த 2016ஆம் ஆண்டு மட்டும் 4 புயல்கள் ஏற்பட்டன. இது 2017இல் மூன்றாகக் குறைந்திருந்தாலும் 2018ஆம் ஆண்டு 7ஆக உயர்ந்தது. அது 2019ஆம் ஆண்டு 8 ஆகப் பதிவானது.

இவற்றில் மூன்றில் ஒரு புயல் அதிக சேதாரத்தை ஏற்படுத்தியது. 2016ஆம் ஆண்டு ஒரு புயலும், 2017ஆம் ஆண்டு 2 புயல்களும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தலா 6 புயல்களும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அதீத கனமழையின் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டு 1,864ஆகவும், 2018ஆம் ஆண்டு 2,181 ஆகவும் உயர்ந்தது. 2019ஆம் ஆண்டு இதன் எண்ணிக்கை 3,056 ஆக உயர்ந்துள்ளது. மிகமிக அதிக கனமழையானது 2016ஆம் ஆண்டு 226 ஆகவும், 2017ஆம் ஆண்டு 261 ஆகவும், 2018ஆம் ஆண்டு 321 ஆக அதிகரித்து, 2019ஆம் ஆண்டு 554 எனும் அச்சம் தரும் எண்ணிக்கையை அடைந்துள்ளது.

புவி வெப்பமயமாதல், காலநிலை மாறுபாடு உள்ளிட்ட காரணங்களால் கடந்த 20 ஆண்டுகளில் புயல் மற்றும் கனமழைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை உலகம் சந்திக்கத் தொடங்கிவிட்டது. சந்தைகளின் தேவைக்கான உற்பத்திக்கு இதுவரை கையாளப்பட்டு வந்த உற்பத்தி முறைகள் புவியின் மீதான சுரண்டலுக்கு காரணமாகியுள்ளது.

எதிர்காலம் குறித்த ஓட்டத்துக்கு மத்தியில் நாம் நேசிக்கும் நமது குழந்தைகள், உறவுகள், சுற்றம் என அனைவருக்குமான ஆபத்துகள் வெளிவரத் தொடங்கி விட்டன என்றுதான் கூற வேண்டும். அரசுகள் அக்கறையுடன் பார்க்க வேண்டிய தலையாய சிக்கல்நிலையே காலநிலை மாற்றம் என்பதாகும். நாம் விரும்பாவிட்டாலும் நம்மைக் காத்துக் கொள்ள காலநிலை அவசரத்தை உணர்ந்து உலக வெப்பநிலையைக் 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

அரசுகள் இதனை உணர்ந்து கொள்வதுதான் சிக்கலுக்கான தீர்வாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

வேடிக்கை எல்லா நேரங்களிலும் இன்பத்தைத் தருவதில்லை.

*நன்றி - தினமணி*

# ஹெர்னியாவிலிருந்து தப்பிக்கலாம்!



**வைத்தியர் எஸ்.எம்.தௌஹ்த்தார்**
**சர்வாங்கம் (பொது வைத்தியம்)**
**சித்த ஆயுர்வேத தள வைத்தியசாலை**
**புதுக்குடியிருப்பு**
**மட்டக்களப்பு**

### ஹெர்னியா நோய் பற்றி சொல்ல முடியுமா?

நீர் அருந்தும் போது உட்கார்ந்து குடிக்க வேண்டும். ஏனென்றால் நின்று கொண்டு நீரை அருந்தும் போது அந்த நீர் வயிற்றிற்குள் அதி வேகமாக நேரடியாகச் சென்று ஹெர்னியா எனும் நோய் ஏற்படுகிறது. குடலுக்குள் நீர் நேராகச் செல்வதால், குடல் சுவற்றை வேகமாக தாக்குகிறது. அதனால் குடல் சுவர் மட்டுமல்ல இரைப்பை குடல் பாதை முழுவதும் பாதிக்கப்படுகின்றது.

இச் செயலை நீண்ட நாட்கள் நாம் செய்வோமாக இருந்தால், இரைப்பை குடல் பாதையின் மீள்தன்மை அதிகரித்து, அதனால் செரிமான பாதையில் செயல் பிறழ்ச்சி ஏற்படக்கூடும்.

### இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன? சிறுநீரகப் பாதிப்பு

நீரை நின்றவாறோ அல்லது நடந்தவாறோ குடித்தால், சிறுநீரகங்கள் வடிகட்டும் செயல்முறை குறைந்துவிடும். சிறுநீரகத்தின் செயல்முறை பாதிக்கப்பட்டால் சிறுநீரங்கள், சிறுநீர்ப்பை அல்லது இரத்தத்தில் நச்சுக்கள் தங்கி, அதனால் சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பை தொடர்பான நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளது.

உட்கார்ந்து நீரை குடிப்பதால், உடலின் அனைத்து இடங்களிலும் நீர் உள் நுழைந்து நச்சுத் தன்மையை சிறுநீரகங்களுக்கு கொண்டு சென்று, நச்சுக்களை உடலில் இருந்து முறையாக வெளியேற்றிவிடும்.


### ஆர்த்ரிடிஸ்

ஆர்த்ரிடிஸ் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிப்பதாக சில ஆய்வுகள் கூறுகின்றது. அதுவும் நீரை நின்றவாறு குடிப்பதால், உடலின் மூட்டுப் பகுதிகளில் உள்ள நீர்மங்களின் சமநிலைக்கு இடையூறை ஏற்படுத்துகிறது. இதனால் நாளடைவில் மூட்டு வலிக்கு ஆளாகி, ஆர்த்ரிடிஸ் ஏற்பட வழிவகுத்துவிடும்.

நரம்புகள் டென்சன் ஆகும்.

பொதுவாக நின்று கொண்டிருக்கும் போது சிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயற்பட ஆரம்பிக்கும். சிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயற்பட ஆரம்பித்தால், இதயத் துடிப்பு அதிகமாகும், இரத்த நாளங்கள் விரியும், நரம்புகள் அதிகமாக டென்சனாகும், கல்லீரலில் இருந்து சர்க்கரை வெளியேற்றப்பட்டு உடல் சுறுசுறுப்புடன் வேகமாக இயங்கும்.

அந்நேரம் நின்றுகொண்டு நீரைக் குடித்தால், நேரடியாக சிறுநீர்ப்பையை அடைந்து விடும். உட்கார்ந்து இருக்கும் போது பாராசிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயல்பட ஆரம்பித்து, உடல் ரிலாக்ஸ் ஆகி, செயற்பாடுகளின் வேகம் குறைந்து, நரம்புகள் அமைதியாகி, உண்ணும் உணவுகள் மற்றும் குடிக்கும் நீர் அனைத்தும் மெதுவாக செரிமான மண்டலத்தில் இருந்து வெளியேற்றப்படும்.



அண்ணாந்து நீர் குடிப்பதால் காது நோய் ஏற்படும்.

அண்ணாந்து நீர் அருந்துவதால் காது நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளது. ஏனென்றால் எமது உடம்பில் காது, மூக்கு, தொண்டை வழிகள் ஒரே பாதையில் அடுத்தடுத்து உள்ளது. அதனாலேயே இது ஏற்படுகிறது.

டம்ளரில் வாய்வைத்துக் நீரை அருந்தினால் காதில் ஏற்படுகின்ற நோய்கள் இல்லாது போகும்.

### இதிலிருந்து விடுபட என்ன வழிமுறைகளை கையாள வேண்டும்?

உடலின் மெட்டபாலிசம் சீராக நடைபெற, போதியளவு நீர் தேவைப்படுகிறது. அவ்வாறு நீரை நாம் அருந்தும்போது உட்கார்ந்து அருந்த வேண்டும். குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ளவாறு நீர் அருந்தி வருவோமாக இருந்தால் எமக்கு வருகின்ற பல நோய்களில் இருந்து நாம் தப்பித்துக்குக் கொள்ளலாம்.

காலையில் எழுந்தவுடன் 1-3 டம்ளர் நீரை அருந்தவும்.

மதிய உணவுக்கு முன் ஒரு மணி நேரத்திற்கு முன் 2-3 கப் குடிக்கவும்.

இரவு உணவு உண்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் 2-3 கப் குடிக்கவும்.

டம்ளரில் நன்றாக வாய் வைத்துக் குடிக்க வேண்டும்.

அவசரமின்றி மெதுவாகக் குடிக்க வேண்டும்.

வாய் நிறைய நீரை வைத்திருந்து கொஞ்சம், கொஞ்சமாக வயிற்றுக்குள் இறக்குதல் வேண்டும். அப்போது எச்சிலுடன் குதப்பி தண்ணீரை வயிற்றில் இறக்குவதால் நான் சாப்பிட்ட உணவு ஜீரணமாகும்.

நம்மில் பலரும் நின்று கொண்டு நீர் அருந்துவதும், இடது கையால் அருந்துவதும், ஒரே மூச்சில் அவசரமாக அருந்துவதும் சர்வ சாதாரணமாகவே செய்கிறோம்.

எனவே, நாம் இந்த முறைகளை கடைப்பிடிப்பதனால் பல நோய்களில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

**நேர்காணல்:**
**பைஷல் இஸ்மாயில்**

# இளநரையை போக்க...!

டிப்ஸோ...டிப்ஸ்...



* முட்டை வெள்ளைக் கருவை தலைமயிரில் தடவி, வாரம் இரண்டு தடவைகள் குளித்து வரலாம்.
* சுத்தமான தேங்காயெண்ணெயில் கருவேப்பிலைச்சாறு கலந்து காய்ச்சி தினமும் தலைக்கு தேய்த்து வர இளநரை மாறும்.
* அரைத்த மருதாணி, முட்டை வெள்ளைக்கரு, தேங்காயெண்ணெய், தயிர், தேயிலை, எலுமிச்சைச்சாறு போன்றவற்றை இளம் வெந்நீரில் நன்றாக கலந்து, இரும்பு பாத்திரத்தில 4 மணிநேரம் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். பின்னர், தலையில் ஒலிவ் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தடவி மசாஜ் செய்து, இந்தக் கலவையை தலைமுடியின் எல்லா பக்கமும் பரவும்படி தடவி, 2-3 மணிநேரம் ஊறவிட்டு கழுவி வர தலைமுடி கருமை நிறமடையும்.

**யாவரும் நலம்**
**ஆர். ராஜலிங்கம்**

# பிரணாயாமம்

## நலன் தரும் யோகாசனம்..!



பிரணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சி செய்யும்போது உடலுக்கு அதிக சக்தி கிடைக்கிறது. மனம் அமைதி பெறுகிறது. மன அழுத்தம் குறைகிறது. நோய் எதிர்ப்புச்சக்தி அதிகரிக்கிறது. தினசரி பிராணாயாமம் செய்பவர்களுக்கு நோய் வந்தால் அது தானாகவே எளிதாக குணமடைந்துவிடும்.

**பிரணாயாமம் செய்வது எப்படி?**

இது செய்யும்போது அதிகளவு ஒட்சிசன் உடலுக்குக் கிடைக்கிறது. மேலும் உடலிலுள்ள நச்சுப்பொருட்கள் அதிகளவில் நீங்கி விடுகின்றன.

**செய்முறை:**

நேராக முதுகு வளையாமல் உட்கார்ந்துகொள்ள வேண்டும்.

மூச்சுக் காற்றை சாதாரணமாக உள்ளே இழுத்து, அதை வேகமாக வெளியே தள்ளவேண்டும்.

அப்படி செய்யும்போது நமது அடி வயிறு உள்ளே செல்லும். அதுவே, நாம் சரியாக செய்கிறோம் என்பதற்கு சாட்சியாகும். இதை சுமார் 20 முறை செய்யவேண்டும்.

**நன்மைகள்**

நுரையீரலின் காற்றை உள்ளிழுக்கும் திறனும் அதன்மூலம் இரத்தத்தைச் சுத்திகரிக்கும் பணிக்காக பிராணவாயுவை அளிக்கும் திறனும் அதிகரிக்கின்றது. காரணம், அதுவரை நுரையீரலின் திறக்காத அறைகளெல்லாம் திறக்கின்றன.

கெட்ட பழக்கங்கள் இல்லாமல் உடலைத் தூய்மையாக வைத்திருக்குமளவு இதன் பயன் கூடுதலாக இருக்கும்.

நம் உடலிலுள்ள ஏழு சக்கரங்களைத் தூண்டச் செய்து சக்கரங்கள் நன்றாக செயல்பட உதவுகிறது.

உடலில் ஏற்பட்டுள்ள நோய்களை குணமாக்கும் சக்தி மூச்சுப் பயிற்சிக்கு உண்டு.

மூச்சுப் பயிற்சி செய்வதால் சகஸ்ரார சக்கரம் தூண்டப்பட்டு, உடலை சுறுசுறுப்புடன் வைத்திருக்க உதவுகிறது.

நினைவாற்றல் பெருகும்.

உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாகும்.

தினமும் மூச்சுப்பயிற்சி செய்து வர உடலுக்குள் கிருமிகள் நுழைவதைத் தடுத்துநிறுத்தும்.

தினமும் மூச்சுப்பயிற்சி செய்வதால் உடல் எப்போதும் ஆரோக்கியமாகவும், புத்துணர்வுடனும் இருக்கும்.

பதற்றம் ஏற்படாமல் இருக்க மூச்சுப்பயிற்சி மிகவும் பயன்படுகிறது.

உடல் ஆரோக்கியமாக இருக்கும். உடல் வளமையடையும்.

ஊளைச்சதை கரைந்துவிடும். தேவைக்கு அதிகமான கொழுப்புச் சத்து குறையும்.

கண்கள் பிரகாசமடையும்.

வயிற்றுக்கோளாறு, ஜீரணக் கோளாறு ஆகியவை மறைந்துவிடும்.

உடல் உறுப்புகள் திறம்பட வேலை செய்யும்.

சிந்திக்கும் திறன் பெருகும்.

# மாரடைப்பு

## நோய்கள் அறிவோம்...!





இரத்தநாளக் கொழுப்புப் படிவே 'அதரோஸ்கிலரோசிஸ்' எனப்படுகிறது. இதயத்துக்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் இரத்தநாளம் தொடங்கி உடலிலுள்ள பல முக்கிய நாளங்களிலும் கொழுப்புப் படிவு (Atherosclerosis) ஏற்படுவது சிறு வயதிலேயே தொடங்கிவிடும். இரத்தநாள உட்சுவர் பழுதடைவதுதான் இதன் முதல்நிலை. இதற்குத் தேவைப்படும் 'நைட்ரிக் ஒக்சைட்' குறைவதுதான் இதற்கு முக்கிய காரணம். இரத்தநாளத்தில் கொழுப்புப் படிவதற்கு நீண்டகால அழற்சியும் மற்றொரு காரணம். இரத்தநாள உட்சுவர் அழற்சியால் கொழுப்புப் பொருட்கள், செல் கழிவுப்பொருட்கள், நாளத்தின் மென்தசை செல்கள், கல்சியம், ஃபைப்ரின் உள்ளிட்டவை சேர்ந்து தமனித் தடிப்பு ஏற்படலாம். இது இரத்தோட்டத்தைக் குறைக்கும்போது நோயாளிக்கு நெஞ்சுவலி ஏற்படும். தமனித் தடிப்பு சிதைந்து முழுமையாக இரத்த நாளத்தை அடைத்துவிடும்போது உடனடியாக மாரடைப்பு ஏற்படுகிறது.

**காரணம்**

குடும்ப மற்றும் பரம்பரை காரணங்கள்.
அதிக உடல் பருமன்.
இரத்தத்தில் கொழுப்பு மிகுதி.
உயர் இரத்த அழுத்தம்.
கட்டுப்பாடற்ற நீரிழிவு.
போதைப் பாவனை.
சரியான உறக்கம் - உடற்பயிற்சி இல்லாமை.
உணவுக் கட்டுப்பாடுகள் இன்மை.
மனஅழுத்தம் மனச்சோர்வு மற்றும் பதற்றம்.

**மாரடைப்பின் அறிகுறிகள்**

சிலருக்கு மாரடைப்புக்கும், நெஞ்சுவலிக்கும் வித்தியாசம் தெரியாது. மார்புப் பகுதியில் சதை, எலும்பு, நுரையீரல் மற்றும் அதைச் சுற்றியுள்ள சவ்வான புளூரா, இதயம் மற்றும் அதை சுற்றியுள்ள சவ்வான 'பெரிகார்டியம்', இரத்தக்குழாய்கள் போன்ற பல உறுப்புகள் உள்ளன. இதில் எந்த உறுப்பில் பாதிப்பு என்றாலும் நெஞ்சுவலி ஏற்படும். அதை மாரடைப்பு என்று சொல்லிவிட முடியாது.

மாரடைப்பு ஏற்படும்போது மார்பின் நடுப்பகுதியில் தாங்கமுடியாத - அதாவது, ஒரு யானை ஏறி அமர்ந்தது போன்ற வலி இருக்கும். மூச்சுத்திணறல் ஏற்படும். அப்போது அவரை ஓய்வாக வைத்து, நாக்குக்கடியில் நைட்ரேட்ஸ் போன்ற மாத்திரைகளை வைக்கும்போது வலி குறைவதும், டென்ஷன் ஆகும்போதும், உடற்பயிற்சி செய்யும்போதும் மீண்டும் வலி அதிமாவதும் மாரடைப்புக்கான ஓர் அறிகுறி.

இதுமட்டுமல்லாமல் வலது அல்லது இடது பக்கவாட்டில் தொடர்ந்து வலி, மார்பு எலும்புக்கு உள்ளே வலி, மூச்சு நின்றுவிடுவதைப்போன்ற உணர்வு, இறந்துவிடுவோம் என்ற எண்ணம், மணிக்கட்டை நன்றாக சுழற்றமுடியாமை போன்றவைகளும் மாரடைப்பின் அறிகுறிகள்.

இருப்பினும், சிலருக்கு எந்த அறிகுறிகளும் இல்லாமலும்கூட மாரடைப்பு ஏற்படலாம். சிலருக்கு அசாதாரணமான அறிகுறிகளான ஏப்பம், மயக்கம், அடிக்கடி சுயநினைவிழத்தல் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

**தடுக்கும் வழிகள்**

மருத்துவரை அணுகி உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சர்க்கரை - கொழுப்பு அளவைத் தொடர்ந்து பரிசோதனை செய்து, தேவைக்கேற்ப மருத்துவச் சிகிச்சை பெற்றாலே மாரடைப்பைத் தவிர்க்கலாம்.

குறைந்தபட்சம் வருடத்தில் ஒரு தடவையாவது இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்துகொண்டால், மாரடைப்பு அபாயத்தை முன்கூட்டியே அறிந்து தடுக்க முடியும்.

இரத்த அழுத்தம் சராசரிக்கும் அதிகமாக இருந்தால், இந்தப் பரிசோதனைகளை அடிக்கடி மேற்கொள்வது நல்லது.

குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒரு முறை கட்டாயம் நீரிழிவு நோய் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

உடல் எடை அதிகமாக இருந்தாலோ அல்லது குடும்பத்தில் யாருக்காவது நீரிழிவு நோய் இருந்தாலோ உடனடியாக நீரிழிவு நோய் பரிசோதனை செய்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இரத்தத்திலுள்ள கொழுப்பின் அளவைப் பரிசோதனை செய்யவேண்டும்.

இதயத்துக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளை எடுத்துக்கொள்வதோடு, கொழுப்பு, இனிப்பு, உப்பு ஆகியவற்றின் அளவுகளை குறைக்கவேண்டும்.

அதிகளவில் பழங்கள், பச்சைக் காய்கறிகள், தானியங்கள், கொழுப்பு குறைவான பால் பொருட்கள் போன்றவற்றை உண்ணலாம்.

முட்டையின் வெள்ளைப் பகுதியில் அதிகப் புரதச் சத்து உள்ளது. ஆனால், அதன் மஞ்சள் கரு அதிகக் கொழுப்பு மிக்கது. எனவே, முட்டையின் மஞ்சள் கருவைத் தவிர்ப்பது மாரடைப்பு ஏற்படுவதைக் குறைக்கும்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்தல்.

போதைப் பாவனையை முற்றிலுமாகத் தவிர்த்தல்.

தினமும், குறைந்தது 30 முதல் 45 நிமிடங்களுக்கு உடற்பயிற்சி செய்யவேண்டும். தொடர் உடற்பயிற்சிகள் மாரடைப்பு அபாயத்தைக் குறைக்கின்றன.

ஆரோக்கியமான எடையை சரிவரப் பராமரிப்பதோடு, இதய நோய்களை ஏற்படுத்தும் உயர் இரத்த அழுத்தம், உயர் கொழுப்பு மற்றும் நீரிழிவு அளவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், அழுத்தத்தைக் குறைக்கவும் உடற்பயிற்சி அவசியம்.

## வாரம் ஒரு மூலிகை

# முடக்கத்தான்



துவர்ப்புச் சுவையுடைய இந்த கீரை, பல மருத்துவக் குணங்கள் அடங்கிய ஓர் அற்புதமான கீரையாகும். முடக்கத்தான் கீரையின் தண்டு, இலை எல்லாவற்றையுமே பயன்படுத்தலாம்.

விற்றமின்களும், தாதுப்புகளும் நிறைந்துள்ள முடக்கத்தான் கீரையை, உணவில் தொடர்ந்து சேர்த்துக்கொள்வதன் மூலம் மூலநோய், மலச்சிக்கல் போன்ற பல நோய்கள் குணமடையும்.

இந்தக் கீரையை விளக்கெண்ணெயில் வதக்கி உண்டால் கைகால் வலி, மூட்டுவலி, முதுகு வலி, உடல் வலி ஆகிய அனைத்து வலிகளும் பறந்துபோகும்.

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள், இந்தக் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது.

மாதவிலக்கு நின்ற பிறகு பெண்களுக்கு ஏற்படும் எலும்புத் தேய்மானம் மற்றும் எல்லாவிதமான மூட்டுவாதம், மூட்டுவலிகளை இந்தக் கீரை குணப்படுத்தும்.

முடக்கத்தான் கீரையை அரைத்து அதன் சாற்றைக் காதில் விட, காது வலி சுகமாகும்.


கட்டிகளிள் மேல் இந்தக் கீரையை வைத்து கட்டினால் அவை உடைந்து புண் ஆறும்.

வாய்வுத் தொல்லையுள்ளவர்கள் முடக்கத்தான் கீரையை சாப்பிட்டு வர, வாய்வுத் தொல்லை நீங்கும்.

மாதவிடாய் நிற்கும் நிலையிலுள்ள பெண்களுக்கு இந்தக் கீரை மிக்க நல்லது. இந்தக் கீரையின் சாறு ஒரு மேசைக்கரண்டி எடுத்துக்கொண்டால், பெண்களின் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகள் தீரும்.

முடக்கத்தான் கீரையை அரைத்து, அடிவயிற்றில் கட்டினால் கர்ப்பிணிப் பெண்களுக்கு சுகப்பிரசவம் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

# விளையாட்டு வினையானது!




★ திருமண வரவேற்பு என்ற பெயரில் மணமகனின் நண்பர்கள் கோமாளித்தனம்!

★ மாப்பிள்ளை சரியில்லையென மகளை திருமண கோலத்திலேயே வீட்டுக்கு அழைத்துச் சென்ற தந்தை





புதிதாக திருமணமான தமது நண்பனுக்கு ஆச்சரியமான வரவேற்பளிக்கிறோம் என்ற பெயரில் நண்பர்கள் செய்த மோசமான செயலால், திருமண நாளிலேயே ஒரு ஜோடி பிரிந்தது.

நண்பர்களின் மோசமாக செயலை சகித்துக் கொள்ளும் மாப்பிள்ளை, தனது மகளை நன்றாக பார்த்துக் கொள்ள மாட்டார் எனக் கூறி, தனது மகளை மணக்கோலத்துடனேயே வீட்டுக்கு அழைத்து சென்று விட்டார் தந்தை.

இந்தச் சம்பவம் தம்புள்ளை பகுதியில் நடந்தது. தம்புள்ளை பகுதியில் வசிக்கும் 28 வயதான இளைஞர் ஒருவர், தனியார் துறையில் பணிபுரிந்தார். அவருக்கு நிறைய நண்பர்கள். நண்பர்களுடன் வேடிக்கையாக பொழுதைப் போக்குவது அவருக்கு முக்கியமான ஒன்று.

நண்பர்களுடன் வெளியில் சென்று அடிக்கடி சிக்கலில் சிக்கிக் கொள்வது தொடர்கதையாக, அவருக்குத் திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகுமென பெற்றோர் நினைத்தனர். அதன்படி, இளைஞனை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தனர்.

அவர்கள் மணமகள் தேடும் படலத்தில் ஈடுபட்டு, ஒரு சில மணப்பெண்களைப் பார்க்கச் சென்றனர். ஆனால், அவர்களில் யாரும் அந்த இளைஞனை விரும்பவில்லை.

இறுதியில் பொலன்னறுவையில் ஒரு மணப்பெண்ணைக் கண்டறிந்தனர்.

எளிய, நல்லொழுக்கமுள்ள அந்தப் பெண்ணை, தம்புள்ளை இளைஞனுக்கும் பிடித்தது. இளைஞனை திருமணம் செய்ய அந்தப் பெண்ணும் சம்மதித்தார்.

நிஷா வீரசிங்க என்ற அந்தப் பெண், அரச சேவையிலும் பணியாற்றினார். அவர் குடும்பத்தில் ஒரே மகள்.

எல்லா பேச்சுவார்த்தைகளும் முடிந்த பின்னர், கடந்த 18ஆம் திகதி திருமணத் திகதி குறிக்கப்பட்டது.

திருமணம் பொலன்னறுவை புதிய நகரத்தில் நிஷாவின் வீட்டில் நடைபெற்றது. குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் அழைக்கப்பட்டிருந்தாலும், விழா எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் சிறப்பாக நடைபெற்றது.

அந்தத் தம்பதியினரின் இரண்டாவது பயணம் 21ஆம் திகதி திட்டமிடப்பட்டது. அன்று தம்புள்ளைக்கு ஜோடி செல்லும். ஊருக்கு வரும் மாப்பிள்ளையை சிறப்பாக வரவேற்க வேண்டாமா என இளைஞனின் நண்பர்களுக்கு யோசனை தோன்றியது. அதுதான் விவகாரமாக மாறி, இப்போது விவாகரத்தில் வந்து நிற்கிறது.

புதுமணத் தம்பதிகள் இரண்டாவது பயணமாக தம்புள்ளை, கிம்ஹறனவிலுள்ள மாப்பிள்ளை வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

அவர்கள் வீட்டுக்கு வரும் போது, மணமகனின் நண்பர்கள் சார்பில் ஒரு எதிர்பாராத வரவேற்பளிக்கப்பட்டது.

பழைய கார் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டு, அதை பலூனால் அலங்கரித்தனர். அதில் கெட்ட வார்த்தைகள் உள்ளிட்ட பல்வேறு வாசகங்களை எழுதி பொருத்தி வைத்தனர். பழைய தகர டப்பா, சிரட்டைகள் போன்றவற்றை காரில் பொருத்தினர்.

கெட்ட வார்த்தைகளைக் கொண்ட ஒரு பெயர்ப்பலகை, ஒரு தள்ளு வண்டி, தகரத்தால் செய்யப்பட்ட நெக்லஸ், சிரட்டைகளை நெக்லஸ் என்ற பெயரில் தயாரித்த மாலை, கள்ளுப்பானை என்பவற்றுடன் அந்த நண்பர்கள் கூட்டம் எதிர்பாராத வரவேற்பிற்கு சென்றது.

திருமண ஜோடி ஊருக்கு வந்த வாகனத்தை நடுவீதியில் திடீரென வழிமறித்த நண்பர்கள், அந்த ஜோடியை வாகனத்தை விட்டு கீழே இறங்கும்படி கூறினர். நண்பர்கள் என்ற பெயரில் கொடூரர்களைப் போல் நின்றவர்களைப் பார்த்து பயந்துபோன மணப்பெண், மணமகனை காரை விட்டு இறங்க வேண்டாமென்றார்.

உடனடியாக இருவரும் இறங்காவிட்டால் தாம் என்ன செய்வோமென்பதே தெரியாது. உடனே இறங்குங்கள் என அவர்கள் மிரட்டல் விட்டனர். மணமகன் இறங்க முயல, மணமகள் தடுக்க, இருவருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

நண்பர்களின் பேச்சைத் தட்ட முடியாதென மணமகன் காரை விட்டுக் கீழே இறங்க, அவர் மீது பழைய கள்ளை ஊற்றினர். பச்சை இறைச்சித் துண்டுகளும் அவர் மீது வீசப்பட்டன. மணப்பெண்ணையும் இறங்குமாறு கூறினர். அவர் மறுக்க, இறங்காவிட்டால் பலவந்தமாகத் தூக்கி இறக்குவோம் என நண்பர்கள் மிரட்டினர். மணமகள், மணமகனிடம் உதவி கோரினார். நண்பர்களின் முன் வாய் திறக்க முடியாமல் அவர் நிற்க, வேறு வழியின்றி மணப்பெண் இறங்கினார்.

மணமகனுக்கு ஹெல்மெட் அணிவித்து, அலங்கரித்த இன்னொரு வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

பின்னர் மணப்பெண்ணை இறக்கி, தள்ளுவண்டியில் தள்ளிச் சென்றனர்.

மணமக்களின் காரின் பின்னர் இன்னொரு வாகனத்தில் வந்த மணமகளின் பெற்றோர் நடப்பது எதுவும் புரியாமல் திண்டாடினர். மணமகளின் தந்தை கீழே இறங்கி வந்து, மணமகனிடம் என்ன நடந்ததென விசாரித்தார்.

தந்தையைக் கண்டதும் மணப்பெண் அழுது, உதவி கோரினார். இந்த குரங்கு சேட்டைகளை விட்டு விட்டு ஒழுங்கு மரியாதையாக காரில் ஏறி வீட்டுக்குப் புறப்படுங்கள் என மணப்பெண்ணின் தந்தை, மணமகனிடம் கூறினார். எனினும், மணமகன் அதனை ஏற்கவில்லை. நண்பர்களை கோபிக்கக்கூடாது, வேண்டுமானால் நீங்கள் அவர்களுடன் பேசி, அவர்களை நிறுத்தச் சொல்லுங்கள் என தளபதி பட ரஜினி – மம்முட்டி நட்பு பாணியில் பேசியுள்ளார்.

தனது மகள் பயந்து போயுள்ளதை சுட்டிக்காட்டி, மனைவி பயத்தில் அழுது கொண்டு நிற்கும் போது, நண்பர்கள்தான் முக்கியம் என்று நிற்கப் போகிறீரோ என மாமா எகிறியுள்ளார். இவர்களைப் பார்த்தால் நண்பர்களைப் போல் தெரியவில்லை, காட்டேரிகளைப் போலுள்ளார்கள். மகள் அழுது கொண்டு நிற்கிறார். போய் காரில் ஏறுங்கள் என மாமனார் கண்டிப்புடன் சொன்னார். ஆனால், தம்புள்ளை ரஜினி, மம்முட்டிகள்தான் தனக்கு முக்கியம் என ஒற்றைக்காலில் நின்றுள்ளார்.

“மகள் எவ்வளவு பயப்படுகிறாள் என்று பாருங்கள். நீங்கள் அதைப்பற்றிக் கூட கவலைப்படவில்லை. முதுகெலும்பு இருந்தால் இந்த நண்பர்களைப் பேசாமல் போகச் சொல்லுங்கள். அப்படிச் செய்ய முடியாவிட்டால், என் மகளை உங்களால் கவனித்துக் கொள்ள முடியாது. அதனால்தான் நான் என் மகளை திரும்ப அழைத்துச் செல்கிறேன். மிருகங்களை போல் இவர்கள் நடந்து கொள்ளும் சூழலில் என் மகளை விட்டுவிட முடியாது. இவர்கள் வேறு என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் என் மகளை விரும்பினால், எங்கள் வீட்டிற்கு வாருங்கள். அதுவே எனது இறுதி முடிவு ” என மாமனார் சொன்னார்.

நண்பர்களை நிறுத்தச் சொல்ல முடியாதென்பதில் மாப்பிள்ளை உறுதியாக இருக்க, அந்த இடத்திலேயே தனது மகளைக் கையோடு அழைத்துக் கொண்டு தந்தை சென்றுவிட்டார்.

***விளையாட்டு வினையானது என்பது இதுதானோ?***

## ஒலிம்பிக் திருவிழா

# விளையாட்டல்ல, அரசியல் களமும்கூட





விளையாட்டுத் திருவிழாவாக ஒலிம்பிக் கருதப்பட்டாலும், உலகின் எல்லா நிகழ்வுகளையும் போலவே இதுவும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. 2021 ஒலிம்பிக் போட்டியில் வீரர்களின் இரண்டு வெளிப்பாடுகள் அதனை உணர்த்தியுள்ளன.

அல்ஜீரிய ஜுடோ வீரர் ஃபெதி நூரின் இஸ்ரேலிய வீரர் தோஹர் பூட்பூலுக்கு எதிரான போட்டியில் பங்கேற்க மறுத்துவிட்டார். இதனால் ஃபெதி நூரினும், அவரது பயிற்சியாளர் அமர் பெனிகெல்பும் அல்ஜீரிய அணியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்கான அங்கீகாரமும் இரத்துசெய்யப்பட்டது.

2019 உலக ஜுடோ சாம்பியன்ஷிப் போட்டியிலும் இதேபோல் இஸ்ரேலிய வீரருக்கு எதிராக மோதுவதைத் தவிர்த்து ஃபெதி நூரின் விலகியுள்ளார். இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலின் ஒரு பகுதியாக காஸா பகுதியில் மே மாதத்தில் நடைபெற்ற இருதரப்புத் தாக்குதல்களில் சொத்திழப்பும், உயிரிழப்பும் ஏற்பட்டன. முன்னர் பலமுறை நடைபெற்றதைப் போலவே ரம்ஜானை ஒட்டியே இந்த மோதல்கள் நிகழ்ந்தன. இஸ்ரேல் தொடுத்த தாக்குதல்களைக் காரணம் காட்டியே ஃபெதி நூரின் விலகியுள்ளார். ஃபெதி நூரினுக்கு முன்பாகவே, மியன்மாரின் இராணுவ ஆட்சிக்கு எதிராக, அந்நாட்டு அணிக்காக விளையாடுவதிலிருந்து விலகுவதாக நீச்சல் வீரர் வின் டெட் ஓஓ அறிவித்தார். ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதிபெற்றிருந்த அவர், நடப்பு ஒலிம்பிக்கிலிருந்து மியன்மார் ஒலிம்பிக் கமிட்டியை விலக்கி வைக்க வேண்டுமென விடுத்த கோரிக்கையை ஒலிம்பிக் கமிட்டி ஏற்கவில்லை. 1968 இல் மெக்ஸிக்கோ ஒலிம்பிக்கின் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வென்ற ஆபிரிக்க அமெரிக்கர்கள் டமி ஸ்மித்தும், ஜோன் கார்லோஸும் பதக்கமளிப்பு விழாவில் ‘கறுப்பின விடுதலை இயக்க’த்தை ஆதரிக்கும் வகையில் கறுப்புக் கையுறை அணிந்து, முஷ்டியை உயர்த்தி நின்றது பரவலாக அறியப்பட்ட ஒலிம்பிக் வீரர்களின் அரசியல் வெளிப்பாடுகளில் ஒன்று.

TOKYO 2020

# இந்திய அணியுடன் வரலாற்று T20 தொடரைக் கைப்பற்றிய இலங்கை

## பிறந்தநாளில் இரு விருதுகளை அள்ளிய ஹஸரங்க



சுற்றுலா இந்திய அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றி, இந்திய அணியுடன் முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச தொடரை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடியது. ஒருநாள் சர்வதேச தொடரை இந்திய அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், அடுத்த தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் 2 போட்டிகள் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றிருந்த நிலையில், இருபதுக்கு 20 தொடர் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் ஷிகர் தவான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய




இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 81 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

82 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 14.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்று தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து இந்திய அணியுடன் இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் தொடரில் விளையாடி வரும் இலங்கை அணி முதல் தடவையாக இருபதுக்கு 20 தொடரை கைப்பற்றியது.

அதுமாத்திரமல்லாமல் கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் மண்ணில் வைத்து இலங்கை அணி இறுதியாக இருபதுக்கு சர்வதேச தொடரை கைப்பற்றியதன் பின்னர், நீண்ட போராட்டத்தின் பின்னர் மீண்டும் ஒரு இருபதுக்கு 20 தொடர் வெற்றியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் ஆட்டநாயகனாக தனது பிறந்தநாளில் 4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை கைப்பற்றிய வனிந்து ஹஸரங்க தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாகவும் வனிந்து ஹஸரங்கவே தெரிவாகியிருந்தார்.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog



இலங்கை அணியுடனான மூன்றாவது T20 போட்டி நிறைவடைந்ததன் பின்னர், இந்திய அணியின் தலைவர் ஷிகர் தவான், இலங்கை அணியின் இளம் வீரர்களுடன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதுடன், அறிவுரைகளையும் வழங்கி முழு ரசிகர்களின் மனதையும் வென்றார். இந்த புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## TOKYO OLYMPIC 2020

| Rank | Team/NOC | 🥇1 | 🥈2 | 🥉3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 18 | 9 | 11 | 38 |
| 2 | Japan | 17 | 4 | 7 | 28 |
| 3 | United States of America | 14 | 16 | 11 | 41 |
| 4 | ROC | 10 | 14 | 10 | 34 |
| 5 | Australia | 9 | 2 | 11 | 22 |
| 6 | Great Britain | 6 | 9 | 9 | 24 |
| 7 | Republic of Korea | 5 | 4 | 6 | 15 |
| 8 | Netherlands | 3 | 7 | 5 | 15 |
| 9 | France | 3 | 5 | 5 | 13 |
| 10 | Germany | 3 | 4 | 8 | 15 |




நேற்றிரவு 8 மணிவரைக்குமான பதக்கப் பட்டியல்



## உலக சாதனை படைத்த சீனா

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், பெண்களுக்கான 4X200 மீற்றர் சாதாரண நீச்சல் (பிரீஸ்டைல்) அஞ்சலோட்டப் போட்டியில் சீன அணி உலக சாதனையை முறியடித்துள்ளது. பந்தய தூரத்தை 7 நிமிடங்கள் 40.33 வினாடிகளில் கடந்த சீனா, அவுஸ்திரேலியா வைத்திருந்த உலக சாதனையை முறியடித்தது.

நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணி 7 நிமிடங்கள் 41.29 களில் போட்டியை நிறைவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வென்றது. 2008 பீஜிங் ஒலிம்பிக்கிற்குப் பிறகு சீனா முதன்முறையாக பெண்களுக்கான 4X200 மீற்றரில் தங்கம் வென்றது.

## முதல் சுற்றுடன் வெளியேறிய நிமாலி; இலங்கையின் பதக்க வாய்ப்பு அரிதாகிறது




பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய நிமாலி லியனாரச்சி முதல் சுற்றில் எட்டாம் இடத்தைப் பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தார்.

32ஆவது ஒலிம்பிக் போட்டிகள் டோக்கியோவில் தற்சமயம் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பமாகின. அந்த வகையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் களமிறங்கிய நிமாலி லியனாராச்சி, முதல் சுற்று ஓட்டத்தில் இறுதி இடத்தைப் பெற்றதன் காரணமாக அடுத்த சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை இழந்தார்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் முதல் சுற்றில் நான்காவது போட்டியாக நடைபெற்ற குறித்த போட்டியில் முதலிடத்தை 2 நிமிடங்கள், 1.42 வினாடிகளில் அமெரிக்க வீராங்கனையும், இரண்டாவது இடத்தை 2 நிமிடங்கள், 1.59 வினாடிகளில் பிரிட்டன் வீராங்கனையும், மூன்றாவது இடத்தை 2 நிமிடங்கள், 1.66 வினாடிகளில் கென்ய வீராங்கனையும் பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றனர். நிமாலி லியனாராச்சி பந்தைய தூரத்தை 2 நிமிடங்கள், 10.23 வினாடிகளில் அடைந்து இறுதி இடத்தை பெற்றார்.

அந்தவகையில் டோக்கியோ ஒலிம்பிக்கில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 9 வீரர்கள் களமிறங்கிய நிலையில், தற்போது 7 வீரர்கள் அடுத்த சுற்றுக்கு செல்லுகின்ற வாய்ப்பை இழந்து முதல் சுற்றிலேயே வெளியேறினர். இன்னும் இரு போட்டியாளர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர்.

ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் யுப்புன் பிரியதர்ஷன அபயகோன் மற்றும் குதிரை ஓட்டப்போட்டியில் மெடில்லா கார்ல்சன் ஆகிய இரு வீரர்களும்தான் டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லக் காத்திருக்கின்றனர்.



## ஒலிம்பிக் சம்பியனை வெளியேற்றிய இந்திய வீரர்

ஆண்களுக்கான ரீகர்வ் அம்புவிடும் போட்டியில் மூன்று முறை ஒலிம்பிக் சம்பியனான தென்கொரிய வீரர் ஓ ஜின்-ஹியெக்கை தோல்வியடையச் செய்து நம்பிக்கையளித்துள்ளார் இந்திய வீரரான அடானு தாஸ்.

முதல் சுற்றில் வெற்றிபெற்ற இந்திய வீரரான அடானு தாஸ் (29 வயது) தென்கொரிய வீரரான ஓ ஜின்-ஹியெக் (39 வயது) உடன் மோதினார். ஓ ஜின்-ஹியெக் இதுவரை மூன்று ஒலிம்பிக் பதக்கங்களை வென்றிருக்கிறார். ஓ ஜின்-ஹியெக் 2012 லண்டன் ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தங்கமும், அணிப்பிரிவில் வெண்கலமும் வென்றார். டோக்கியோ ஒலிம்பிக்கில், சில தினங்களுக்கு முன் நடந்த ரீகர்வ் அணிப் பிரிவிலும் தங்கம் வென்றார்.

முதல் சுற்றில் 26 - 25 என வென்று 2 புள்ளிகள் பெற்றார் ஜின்-ஹியெக். இரண்டாவது, மூன்றாவது செட்களில் இரு வீரர்களும் 27 புள்ளிகள் எடுக்க, 2 செட்களுமே சமநிலையானது. இறுதியில் ஆட்டம் ஷூட் அவுட்டுக்குச் சென்றது. இருவரும் ஒரேயொரு அம்பை எய்வார்கள். அதிக புள்ளிகள் பெறுபவர் போட்டியின் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். இருவரும் ஒரே புள்ளி பெற்றால், யாரின் அம்பு மையப்புள்ளிக்கு மிக அருகில் இருக்கிறதோ, அவருக்கே வெற்றி.

முதலில் அம்பை எய்த ஜின்-ஹியெக் 9 புள்ளிகள் எடுத்தார். கடைசி நொடியில் நன்றாக நேரம் எடுத்து அடானு எய்த அம்பு, மையப்புள்ளிக்கு மிக அருகே செல்ல நடுவர்கள் 10 புள்ளிகள் என்று அறிவிக்க, 3 ஒலிம்பிக் பதக்கங்கள் வென்ற தென்கொரிய வீரர் ஒருவரை வென்று சரித்திரம் படைத்தார் அடானு தாஸ்.

இந்த வெற்றியின் மூலம் அவர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கமும், டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கமும் பெற்ற ஜப்பான் வீரர் டகரு புருகாவை இன்று எதிர்கொள்கிறார்.

## பாண்டியாவைத் தொடர்ந்து சஹல், கௌதமுக்கு கொரோனா





இலங்கை அணியுடனான சுற்றுப் பயணத்தின் போது இந்திய அணியின் சகல துறை வீரரான குருணால் பாண்டியாவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையில், நேற்று மேலும் இரு வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய கிரிக் கெட் அணியானது இலங் கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப் பட்ட ஓவர்கள் கொண்ட இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடியது. இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியை தொடர்ந்து இரண்டாவது போட்டி இரவு நடைபெறவிருந்த நிலையில், அன்றைய தினம் காலை வேளையில் இந்திய அணியின் சகலதுறை வீரரான குருணால் பாண்டியாவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த மேலும் 8 வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தீபக் சஹார், இஷான் கிஷன், மணீஸ் பாண்டி, ஹார்டிக் பாண்டியா, சூர்யகுமார் யாதவ், பிரித்வி ஷா, யுஸ்வேந்திர சஹல் மற்றும் கிருஷ்ணப்பா கௌதம் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறான நிலையில், நேற்று வெளியான கொரோனா வைரஸ் பரிசோதனை முடிவில் சுழற்பந்துவீச்சாளரான யுஸ்வேந்திர சாஹல் மற்றும் கிருஷ்ணப்பா கௌதம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

## இலங்கை வரும் தென்னாபிரிக்கப் படை




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி கடந்த 2018ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்க அணி இறுதியாக கடந்த 2018 ஜூலை - ஓகஸ்ட் காலப்பகுதியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ஒரே போட்டி கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடியது.

டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஒரே போட்டி கொண்ட இருபதுக்கு 20 தொடரை இலங்கை அணி 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இந்நிலையிலேயே எதிர்வருகின்ற செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் தென்னாபிரிக்க அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுகிறது. போட்டிகள் அனைத்தும் கொரோனா வைரஸ் விதிமுறைகளுக்குட்பட்ட வகையில் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன.

**போட்டி அட்டவணை**

2 செப்டெம்பர் - முதலாவது ஒருநாள் போட்டி
4 செப்டெம்பர் - இரண்டாவது ஒருநாள் போட்டி
7 செப்டெம்பர் - மூன்றாவது ஒருநாள் போட்டி
10 செப்டெம்பர் - முதலாவது இருபதுக்கு 20 போட்டி
12 செப்டெம்பர் - இரண்டாவது இருபதுக்கு 20 போட்டி
14 செப்டெம்பர் - மூன்றாவது இருபதுக்கு 20 போட்டி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7